
www.tamilarangam.net

raya

# தூண்டில்

RAYA
27 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE : FRANCE



amilische zeitschrift des Südasien Büro Nr. 39

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண் விடுதலையுடன் தொடர்புடைய சிந்தனைகள் தமிழ்பெண்கள் மத்தியில் மீள் பெற்றிருத்தலை எண்பது காலப்பகுதி உறுதிப்படுத்துகிறது. பெண்கள் இயக்கங்கள், சமுக பொருளாதார கலாசார ஏடுகள் தமிழ் பெண்கள் பிரச்சனைக்கு முகம் கொடுக்கத் தொடங்கின. இவ் எழுச்சி பல்வேறுபட்ட விவாதங்களுக்கு பொறுப்பாக இருந்ததுடன் அந்த காலப்பகுதியில் கணிசமான அளவு இளஞ்சந்ததியினரைக் கவர்ந்த விடயமாகவும் இருந்தது.

பெண்கள் முன்னேன்ற அமைப்பின் முதலாவது கூட்டம் மார்ச் 1980 இடம் பெற்றது உண்மையிலேயே ஒரு அடையாளமாகும். இது பெண்களின் வெளிப்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. அந்த முதலாவது சந்திப்பிற்கு குறிப்பிடத்தக்களவு ஆண்களும், பெண்களும் சமுகமளித்திருந்தனர். அத்துடன் அவர்களுள் பலர் பின்பு தமிழ் அமைப்புக்களிலும், பெண்கள் அமைப்புக்களிலும் குறிப்பிடத்தக்கவர்களாயினர். அச்சந்திப்பில் கலந்து கொண்ட சிலர் விடுதலை அமைப்புக்களின் முக்கிய பகுதிகளை தாங்குபவர்களாக இருந்தனர்.

பெண்கள் முன்னேற்ற அமைப்பு பின்பு அமைப்பு, நடவடிக்கை என்பவற்றில் மாற்றமடைந்து தற்போது கல்வி வட்டமாக இயங்குகிறது. பெண்கள் கல்வி வட்டம் அதிகளவு அங்கத்தவர்களைக் கொண்டிராத போதிலும் வெளியீடுகள், விவாதங்கள், செயற்பாடுகள் மூலம் பெண்ணிலைவாதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை சீர்ப்படுத்துவதில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் PWO அமைக்கப்பட்ட சில ஆண்டுகளின் பின் வவுனியாவிலிருந்து பெண்கள் விடுதலை அமைப்பு எனப் பெயரிடப்பட்ட பெண்கள் அமைப்பு இயங்க ஆரம்பித்தது. WLO பெண் எழுச்சி என்ற சஞ்சிகையையும் வெளியிட்டனர். WLO பின்பு PLOTE இன் பெண்கள் அமைப்பாக செயற்பட்டது. இது தமிழ்ப் பெண்கள் அமைப்பு மாதிரியை ஒத்திருந்தது.

1984 பகுதியில் தமிழ் தேசியக் குழுக்கள் தமது பெண்கள் அமைப்புக்களை அமைக்கத் தொடங்கின.
இதன் மூலம்:
83 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பெண்கள் PLOTE, EPRLF, LTTE போன்றவற்றில் இணையத்தொடங்கினர்.
இதனால் பெண்களுக்கு தனிப்பட்ட அமைப்பு தேவையென வற்புறுத்தப்பட்டது.
ஆயுதக் குழுக்களிடையே அமைப்பாகும் பெண்கள் பற்றி பரவலான கருத்துகள் வெளிவந்தன.

EPRLF- EWLF ஈழம் பெண்கள் விடுதலை முன்னனி.
PLOTE - TWO தமிழ் பெண்கள் அமைப்பு
LTTE- சுதந்திரப்பறவைகள் என்பன இவற்றுள் சிலவாகும். 1989 ன் பிற் பகுதியில் LTTE பெண்கள் முன்னணியாகப் பெயரிடப்பட்டது. மேற் குறிப்பிட்ட அமைப்புகளுடன் EROS, NLFT, TELO போன்ற அமைப்புக்களும் தேவை ஏற்படும் போது பயன்படுத்தக் கூடியவாறு (பயிற்சியளிக்கப்பட்டு) பல பெண்களை அமைப்புக்களில் சேர்த்துக் கொண்டனர். ஆனால் அவர்கள் தனிப்பட்ட அமைப்பாக இயங்கவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்

கருத்தளவில் முன்னேற்றமான EROS, பெண்கள் அமைப்பின் சகல நடவடிக்கைகளிலும் தொடர்புடையவளாகவும், பங்கேற்று செயற்பட முற்படும் போது சம உரிமையின்மை நிர்மூலமாக்கப்படும் என தமது அரசியல் ஏடான பொதுமையில் குறிப்பிட்டனர்.

1984-1988 காலப்பகுதியில் அரசியல், அமைப்பு அடையாளங்களை ஏற்றுக் கொள்ளாத பெண்கள் அமைப்புக்கள் தோன்றின. இவற்றுள் அன்னையர் முன்னணி பிரபல்யமானதாகும். இவற்றோடு தமிழ் பெண்கள் விழிப்புணர்வு முன்னணி, வேலை செய்யும் பெண்கள் அமைப்பு, ஏற்கனவே இயங்கி வந்த கல்வி வட்டம் என்பனவும் இயங்கி வந்தன. 80 இன் நடுப்பகுதியில் யாழ்குடா நாடு பெண்கள் அமைப்புக்களின் பல்வேறுபட்ட செயற்பாடுகளின் மையமாக விளங்கியது. அத்துடன் பெண்களால் பெண்களுக்கான ஆறு வெளியீடுகளும் வெளிவந்தன. தமிழ் சமுதாயத்தில் "புதியபெண்" பாத்திரம் பதிக்கப்பட்டது. இச் சார்பற்ற பெண்கள் அமைப்புக்கள் பெண்ணிலைவாதக் கருத்துக்கள், வெளியீடுகளை வெளிக் கொணர்ந்தனர். இவற்றுள் சில தென் பகுதியிலுள்ள பெண்ணிலைவாதக் குழுக்களுடன் கருத்து முரண்பாடற்ற தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

முஸ்லிம் மக்கள் தமிழ் மொழிபேசும் இனமாக தேசிய விடுதலை அமைப்புக்களால் கருதப்பட்ட போதிலும் குறைந்தளவு எண்ணிக்கையிலான முஸ்லிம் பெண்களையேனும் அங்கத்தவர்களாக இப் பெண்கள் அமைப்புக்கள் எவையும் கொண்டிருக்கவில்லை. சார்பற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் அமைப்புக்கள் அவர்களை தமது அமைப்புக்களுடன் சேர்த்துக் கொள்ள முயற்சித்தபோதும் அதில் பெருமளவு அக்கறை செலுத்தவில்லை.

குறிப்பாக எல்லா ஆயுதக் குழுக்களும் பெண்கள் முன்னணியினையும் அத்தோடு இராணுவ பயிற்சி பெற்ற பெண்கள் தமது அமைப்புக்களில் இணைந்திருப்பதை பெருமையாகக் கருதினர். LTTE பெண்களுக்கு ஆயுதப் பயிற்சியினை வழங்குவதில் முன்னணி வகித்தனர். LTTE யினரின் பயிற்சி அளிப்பதில் காட்டப்பட்ட அளவிற்கதிகமான ஆர்வமானது பெண்கள் பெண்ணிலைவாதக் கருத்துகளுக்கு ஆதரவளிப்பதைவிட ஆயுதப்போராட்டத்திற்கு கடமைப்பட்டவர்களாக்கியது. ஆயுதப்பயிற்சி பெற்ற முதலாவது பிரிவு 1984 ன் ஆரம்ப பகுதியில் வடக்குப் பிராந்தியத்தின் மன்னாரில் தரித்திருந்தது.

1986 இன் நடுப்பகுதியில் LTTE யினரால் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான இராணுவத் தாக்குதலின் போது ஏனைய அமைப்புக்களின் பெண்கள் முன்னணிகள் செயலிழக்கச் செய்யப்பட்டது. குறிப்பாக PLOTE, EPRLF ஆகியவற்றின் தொடர்ந்த இழப்பின் மூலம் இக் குழுக்கள் பின்வாங்கி இந்தியாவிற்கு சென்றனர். இப்பின்வாங்கலின் போது அமைப்புக்களில் இயங்கிய பெண் அங்கத்தவர்கள் பற்றி தலைவர்கள் எந்த கவனத்தையும் செலுத்தவில்லை. தனியே தலைவர்களின் மனைவியரும், தலைமையுடன் நெருங்கிய வேலைகளில் ஈடுபட்டோரும் மட்டுமே இந்தியாவிற்கு செல்ல முடிந்தது.

இதன் பின் தமிழ் அரசியல் முக்கிய சம்பவங்களுக்கும் மாற்றங்களுக்கும் மையமாகியது. இந்திய- இலங்கை ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. IPKF அரசியலில் முக்கிய பங்கினை வகித்தது. இதன் மூலம் 1987 ஐப்பசியில் யுத்தமும் அதைத் தொடர்ந்து புலிகள் SL அரசுடன் குறுகியகாலம் பேச்சுவார்த்தையிலீடுபட்டனர். அதன் பின்பு அடுத்த யுத்தம். 1987 ஐப்பசி யுத்தம் பாரிய அழிவை ஏற்படுத்தியதுடன் பெண்கள் அமைப்புக்களின் இயக்கம் மிகவும் குறைவுபட்டது.

சார்பற்ற பெண்கள் அமைப்புக்கள், அமைப்புக்களின் பெண்கள் முன்னணிகளினது உருவாக்கமும் ஒரு புதிய அநுபவமாகவும் சில வேளைகளில் அதிர்ச்சி அளிக்க கூடியதாகவும் தந்தைவழி சமுக அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்ட யாழ்ப்பாண சமூக மக்களுக்கிருந்தது. யாழ் தமிழ் சமூகத்தின் பழமை பேணிகளினால் உணர்வு பெற்ற பெண்களை கண்டித்து துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கங்கள், என்பன வெளியிடப்பட்டன. சிறந்த தமிழ் பெண்களின் நாற்குணங்களான அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்றன பெண்களின் செயற்பாடுகளால் பரிகசிக்கப்பட்டன. ஆயுதப்பயிற்சி, இராணுவ உடை என்பன வீதிகளில் எந்நேரமும் சென்று வருவதற்கு அங்கீகாரத்தை வழங்கியதுடன், உணர்வு, அதிகாரம் அத்தோடு சுதந்திரத்தையும் வழங்கியது. ஒரு முக்கிய தேசிய விடுதலை அமைப்பு பெண்களின் பிரச்சனைகளையும் தமது அரசியற் கருத்துக்களுடன் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற் முன் வந்தது. தடைகளிலிருந்து பெற்ற விடுதலையானது பெண்களை தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு

www.tamilarangam.net

கொள்ள வைப்பதன் மூலம் எதிர்கால சமுகத்தில் பெண்கள் சமமாக வாழ முடியும் என்பதை நோக்கி இவ் அமைப்புக்கள் நகர்வைக் காட்டி நின்றன. இவ்விடயத்தை அமைப்புக்களின் பெண்கள் முன்னணிகள் மிகவும் ஆர்வத்தோடு ஏற்றுக் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர்.

IPKFஇன் பின்வாங்கலின் பின் LTTE வடக்கு கிழக்கு-மன்னார்-பகுதிகளில் அதிகாரம் செலுத்தினர். அந்நேரம் சில பகுதிகளில் குறைந்தளவு அமைதி வழக்கத்தில் இருந்த போது மீண்டும் பெண்களின் செயற்பாடுகள் இடம் பெறத் தொடங்கின. யாழ் குடா நாட்டில் LTTE யினரின் பெண் அங்கத்தவர்கள் கச்சிதமான உடையணிந்து, ஆயுதபாணிகளாக ஜீப் வண்டிகளில் சுற்றி வந்த காட்சி தென் பகுதி மக்களையும் கவர்ந்த விடயமாகிற்று. இந்தக் காலப்பகுதியில் முதல் முதல் LTTE பெண் PLFT இன் உதவி செயலாளராக நியமிக்கப்பட்டார். LTTE இன் பெண்கள் அமைப்பு 1990 ஏப்பிரல்/ மே யில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்து பெண்விடுதலைக்கு வசதியளிக்கின்ற பத்து கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேற்குறிப்பிட்ட மாற்றங்களுடன் சராசரிப் பெண்கள் தமிழ் பிரதேசங்களில் யுத்த காலச் சூழலின் பொருளாதார, நாளாந்த வாழ்வு, போன்ற பல சவால்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இப் போர் சூழல் பொதுவாக தமிழ் பெண்கள் மத்தியில் பாரம்பரியமற்ற நடவடிக்கைகளின் தேவையை ஏற்படுத்தியது. பலபெண்கள் தமது ஆண் அங்கத்தவர்களை இழந்ததும் தங்களது குடும்பத்தில் முக்கியமானவர்களானார்கள். இந்நிலைமை பெண்களை குடும்பப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும்படியும், இளம் ஆண் அங்கத்தவர்களின் பாதுகாப்பையும் வற்புறுத்தியது. (வழமையான நிலைமைகளில் ஆண்களால் நிர்வகிக்கப்படுவது) அத்துடன் பல ஆண்கள் வெளிநாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் சென்றிருந்தனர். சந்தைகள், பாடசாலைகள், ஏனைய ஸ்தாபனங்கள் வீதிகளில் கூட பெண்களின் வெளிப்படையான தோற்றங்கள் முக்கிய காட்சிகளாகின.

மேற்குறிப்பிட்ட விபரங்கள்பெண்விடுதலைபற்றிய கருத்துக்கள்வெளிவருவதற்கு தேசிய விடுதலைப் போராட்டம் மூலம் கிடைக்கப் பெற்ற நன்மையாகும். அதேநேரம்தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களது பங்களிப்பும், பெண்கள் முன்னணிகளினது செயற்பாடுகளும் சமுகத்தில் எந்தவித விளைவினையும் ஏற்படுத்தவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்நிலைமையை சரிவர விளங்கிக் கொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும் பின்வரும் கேள்விகள் எழுப்பப்படுவது முக்கியமானதாகும்.

1. தேசிய இயக்கங்கள் பெண்பிரச்சனையை முன்வைப்பதற்குரிய உண்மையான காரணம் தமது இயக்கங்களுக்கு ஆட்சேர்ப்பதா?

2. அமைப்புக்களில் பெண்களின் அந்தஸ்து? உண்மையிலேயே அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டார்களா?.

3. வடக்கிலும் கிழக்கிலும் உள்ளபெண்களை எதிர்நோக்கும் முக்கிய சமுகப் பிரச்சனை பற்றி ஏதாவது ஆய்வு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப் பட்டதா?

4.முக்கியமான முன்னேற்றமான விளைவுகளை சமுகத்தில் ஏற்படுத்தி உள்ளதா?

5. திரும்பவும் 'அடுப்பூதும்' பழைய நிலைமைக்கு திரும்பி செல்கின்ற நேரமா?

கடந்த காலத்தை நோக்கினால் தமிழ் தேசியக் குழுக்கள் பெண்விடுதலை, சம உரிமை என்பவற்கு ஆதரவாக இருந்த போதும் பெண்கள்விடுதலை பற்றியதெளிவான கருத்துக்களைக் கொண்டிருக்கவில்லை. இதனை யுத்த தந்திரமாகப் பயன்படுத்தி அதிக பெண் அங்கத்தவர்களை தங்கள் அமைப்புக்களில் சேர்த்துக் கொண்டனர். சகிப்புத் தன்மை, தியாக உணர்வு, தன்னல மறுப்பு போன்றவற்றை வாழ்க்கையின் உயர் லட்சியங்களாகக் கொண்டவர்களாக வளர்க்கப்பட்ட பெண்களை அமைப்புக்களில் சேர்த்துக் கொண்டது பயன்தரக் கூடியதாக இருந்தது. பெண் இராணுவ வீரர்கள் சொந்த நன்மைகளை இழந்தாலும் திறமையுடன் கட்டளைகளை நிறைவேற்றும் தன்மை உடையவர்களாக இருந்தனர். பெண்களின் விடுதலை, சுதந்திரம் என்பவற்றில் உண்மையான ஈடுபாடின்றி தந்திரமான முறையில் செயற்பட்ட தேசவிடுதலைக் குழுக்கள் ஆபத்தான நிலைமையின் போது அலட்சியத்துடன் நடந்து கொண்டனர். PLOTE, EPRLF, மீது LTTE அதிகாரபூர்வமாக தடையுத்தரவு விதித்த போது இவ்விரு அமைப்புகளும் பெண் அங்கத்தவர்கள் மீது பெருமளவு கவனம் செலுத்தவில்லை. இவ் இரு அமைப்புகளும் தலைமறைவாகவும், தமிழ்நாட்டிற்கும் பின் வாங்கியபோது பெண் அங்கத்தவர்கள் தனித்து விடப்பட்டனர். உயர் பதவி வகித்தவர்கள் அல்லது தலைமையுடன் தொடர்புடைய வேலை திட்டங்களில் ஈடுபட்டோர் மட்டுமே இந்தியாவிற்கு சென்றனர். ஏனையோர் சமுக, சுய பிரச்சனைகளை எதிர் நோக்கியபடி வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர். அவர்கள் சமுகத்தினாலும், ஏனைய அமைப்புக்களினாலும் பரிகசிக்கப்பட்டனர். யூலை 87க்குப் பின்குறிப்பிட்ட சில அமைப்புக்கள் பெண்கள் முன்னணியின்றி மீண்டும் இயங்கத் தொடங்கின. 1988 டிசம்பரில் நடைபெற்ற மாகாண சபை தேர்தலின் போது பெண் பிரதிநிதி எவரும் முன் மொழியப்படவில்லை.

தேசியவிடுதலை அமைப்புக்களின் உயர்பதவி வகித்தவர்களின் திருமணம் மிகவும் சுவாரசியமானதாகும். பெரும்பாலான தலைவர்கள் அமைப்புக்கு வெளியே பாரம்பரிய திருமண ஒழுங்கிணை உறுதிப்படுத்துகின்ற முறையில் திருமணம் செய்து கொண்டனர். ஒரு குறிப்பிட்ட அமைப்பின் உப தலைவர் பெண் சிப்பாய் ஒருவரை திருமணம் செய்து கொண்டார். திருமணம் இராணுவரீதியிலான செயற்பாடுகளிற்கு முடிவாக இருந்தது. அவள் தனியே மனைவி என்ற பங்கினையே வகிக்க முடியும். ஆபத்தான நிலைமைகளில் அலட்சியமான தன்மையும், சொந்த விடயங்களின் போது பாரம்பரிய கருத்துக்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதையும் இச் சம்பவங்கள் காட்டுகின்றன.

தேசிய விடுதலை அமைப்புகளின் இப் போக்கு பெண்களை இன உற்பத்தியில் ஈடுபடுவோராக கருதுவதோடு அவர்களது பெண்விடுதலை பற்றிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வையினையும் கேள்விக்குட்படுத்துகிறது. இன அடையாளப்படுத்தலின் போது குறிப்பிட்ட பாங்கான உடையும், அலங்காரமும் பெண்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது. 1985 இன் பிற்பகுதியில் "பெண்களுக்கு எச்சரிக்கை"என்ற தலைப்பிடப்பட்ட பிரசுரம் யாழ் குடாநாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டது. சகல பெண்விடுதலை அமைப்புக்களும் இதனைக் கண்டித்து துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டன. இதில் குறிப்பிடத் தக்கது என்னவெனில் ஒரு தீவிரவாத இயக்கத்தின் பெண்கள் அமைப்புகூட இதை கடுமையாக கண்டித்திருந்தது. இருந்தும் அது தமிழ்ப் பெண்கள் தமது கலாசார அடையாளத்தைப் பேண வேண்டும் என வலியுறுத்தியது: "தமிழ்ப் பெண்கள் தம் உடை,பொட்டு, மற்றும் அலங்காரங்களில் கவனம் செலுத்துவது முக்கியம். எமது கலாசாரப்படி உடை அணிவதென்பது அடிமைப் பட்டதாகாது. எம் தேசியப் போராட்டம் தொடர்கிறது. ஆனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் எமது தேசீயத்தை இழிவு படுத்துகின்றன".

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற குறிப்பிட்ட சில விழாக்களின் போது பெண்கள் குறிப்பிட்ட நிறத்தில் சேலை அணியும்படி கேட்கப்பட்டனர். ஆண்களும் வேட்டி அணிந்து வைபவத்தில் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டதாக இப்போது அறிகிறேன். ஆதிக்கவாதம் ஓர் அரசியல் சக்தியாக உருவெடுக்கும் போது தேசிய அடையாளத்தினையும், பெருமைகளையும் பெண்கள் பாதுகாக்க வேண்டும் என்ற தன்மை உருவாகின்றது. இப் போக்கினை இதனை ஒத்த தேசிய விடுதலைப் போராட்டங்கள் இடம் பெற்ற நாடுகளில்



www.tamilarangam.net

அவதானிக்கலாம். பெரும்பாலான பெண்கள் அமைப்புக்களின் முக்கிய பதவிகளை வகிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. மிகச் சிலரே மருத்துவம், உணவு, ஆவணப்படுத்தல் போன்ற துறைகளுக்கு பொறுப்பாக இருந்தார்கள். அமைப்பின் முக்கிய முடிவெடுத்தல் போன்ற எவையும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

பெண்கள் முன்னேற்றம் பற்றிய கருத்து தேசிய விடுதலை அமைப்புக்களின் சொந்த நலனுக்கு முன் முக்கியமிழந்து போனது. தமது அமைப்புகள் பற்றிய பிரச்சாரத்துக்கும், மக்களிடையே பிரபலப்படுத்துவதுக்கும் தலைவர்கள் முதலிடம் வழங்கியதால் பெண்கள் அமைப்புக்கள் தங்களிடையே ஒரு ஐக்கியமான முன்னணியினை அமைக்கவோ, பொதுப்பிரச்சனைகள் பற்றி சேர்ந்து ஒழுங்குகளை மேற் கொள்ளவோ இயலாதிருந்தது. தமிழ் ஈழத்தின் மையமாக இயங்கி வந்த யாழ் குடா நாட்டினுள் பெண்களின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப் படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

தமிழ் பகுதிகளின் நீடித்த யுத்தகால நிலைமை, நாளாந்த வாழ்க்கையின் ஆபத்தான நிலை, அகதிநிலை இவை அனைத்தும் சமுகக் கட்டமைப்பில் உடைவை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில் சமுகத்தின் 'லட்சியப் பெண்' பற்றிய கருத்தும் கணிசமாக மாறும் என சாதாரணமாக எதிர்பார்க்கலாம். ஆனால் நடைமுறையில் இக்கருத்து மிகச் சிறிதே மாறியுள்ளது.

சமுகத்தில் வலிமையான அடிப்படை மாற்றத்தினை ஏற்படுத்த முடியாமல் போனமைக்கு தேசிய விடுதலை அமைப்புக்களின் பெண்கள் பிரிவினரை மட்டும் குற்றம் சாட்ட முடியாது. பெண்கள் முன்னணியினர், சார்பற்ற பெண்விடுதலை அமைப்புக்கள் ஆகியவற்றின் இம் முயற்சிகள் தமிழ் சமுதாயத்தில் பெண்கள் அடக்கப்படக் கூடாது என்பதற்கான எடுத்துக் காட்டுகளாகும். இக் காலப்பகுதியில் பல பெண்களின் விழிப்புணர்வுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள்பற்றிய கருத்தரங்குகள், விவாதங்கள் என்பன இடம் பெற்றன.

ஆண்களின் தலைமையிலான அமைப்புக்கள், பெண்களின் நிலைமைகள் பற்றிய வேறுபட்ட பார்வை, முக்கியமாக தந்தை வழி சமுக அமைப்பின் கருத்துக்கள் என்பன குறுக்கீடுகளாக இருந்தன. பெண்கள் தமது உரிமைகளை, அபிப்பிராயங்களை தெரிவித்த சம்பவங்களும் அமைப்புகளில் நிகழ்ந்துள்ளன. தேசிய விடுதலைப் போராட்டத்தினால் மட்டும் அடைய வேண்டியவற்றை அடைய முடியாது என்பதை ஒரு சில பெண்கள் அமைப்புகளாவது தெளிவாக உணரக் கூடியதாக இருந்தது. அவர்கள் பெண்விடுதலைப் போராட்டத்தினை தந்தை வழி சமுக கட்டமைப்பின் கருத்தியல், லௌகீக அம்சங்களுக் கெதிரான நிரந்தரமான போராட்டமாக கருதுகின்றனர்.

இந்த காலப்பகுதியில் முன்னேற்றமான மாற்றங்கள், கருத்துக்களில் மாற்றங்கள் என்பவை ஏற்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். இவ் விடுதலை பற்றிய அநுபவம் மறக்க முடியாதவையாக இருக்கும். தமது உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வும் தமது வாழ்வில் ஏற்பட்ட

www.tamilarangam.net

முன்னேற்றகரமான மாற்றங்கள் பற்றிய நினைவும் சமுகத்திலுள்ள இளம் பெண்களின் ஞாபகத்தில் நிலைத்திருக்கும்.

இவ் ஆர்வம் அமைப்புரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டு முன்னேற்றகரமான சிந்தனைகளை வளர்க்குமா, பெண்கள் தம்மை சுதந்திரமான குழுக்களாக ஒழுங்கு படுத்தி தமது இலட்சியத்தை நோக்கி வேலை செய்வதற்கு இடம் இருக்குமா போன்ற முக்கியமான கேள்விகளுக்கு விடை காணுதல் அவசியமாகும்.

ஒரு தீவிரவாத இயக்கத்தில் தனது இளமைக் காலத்தின் ஏழாண்டுகளைக் கழித்து, இயக்கம் தடை செய்யப்பட்ட பின் இடம் பெயர்ந்து வாழும் ஒரு பெண் போராளி அண்மையில் என்னிடம் கூறினார்:

"தமிழ் தேசியவாதத்தில் வலதுசாரி தீவிரவாதம் உருவாகும் அறிகுறிகளை நாம் காண்கிறோம். சனநாயகச் சூழல் உருவாக்கப்படாத நிலையில் அமைதி ஏற்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்பும் போது பெண்விடுதலைக்கு எதிரான கருத்துகள் வரக்கூடும்... இவ்வாறான சூழல் ஏற்பட்டு கலாச்சார அடிப்படைவாதம் வலிமை பெறும் போது பெண்கள் மீண்டும் தமது பாரம்பரிய பங்கினை வகிக்குமாறு அறிவுறுத்தப்படலாம். இந்நிலை குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டும்". ●

அஸ்வினி (ஈ.டிம்)



# நூல் அறிமுகம்



சுவடுகள் பதிப்பகம்
Herslebs Gate .43
0578 Oslo 5
Norway

www.tamilarangam.net

# புதிய ஜனநாயகம்

இருப்புக்கும்
வாழ்வுக்கும் இடையில்
உறைந்து போன
உதிரங்களுடன்
எலும்புகள்
கெஞ்சிப் பார்த்தன.

ஆனாலும்....

மிதித்தபடியே
மிகுதிப் பிணங்களை வீழ்த்த
இவர்கள்
நாயாய்...
பேயாய்...

அது யாரால் இருந்தால்
இவர்களிற்கென்ன?

சிதைந்து
கருகியதெல்லாம்
ஜனநாயகச் சருகுகள்தானே!

பாவம்
நமது தேசம்.

தொலைந்த
தொடர்புகளைத் தேடி
களைத்து
இப்போ
நிதர்சனங்களுடன்
மல்லுக்கட்டிக்கொண்டு...

இன்னும்
எஞ்சியிருப்பது நமது
கனவுகள் மட்டுந்தான்.

இழக்கப்படாதிருக்க
அதை மட்டும்
எப்படி
விட்டு வைத்திருக்கிறார்கள்?

எப்படியோ
புதிய ஜனநாயகப்
பிரகாரம் நீங்கள்
கவனம்!
நானும்தான்!!

இல்லையேல்...

கனவையே
களவாடியதாய்
"கனவுத்துரோகி"
மட்டை
எம் மார்பில்
கம்பீரமாய் தொங்கலாம்.

கவனம்!!!

★ சுமி ★

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

சென்ற இதழில் வெளியாகிய "தேசத்தின் குறிப்புக"ளில் பிரஜைகள் குறிப்பிட்டிருப்பது போல் '..தடுப்பு யுத்தம் விடுதலை யுத்தமாக மாறுவதென்றால் அது மக்கள் யுத்தமாக மாறவேண்டும். அப்படி மாறுவதென்றால் இது தமது விடுதலை போராட்டம் என்ற உணர்வு மக்களுக்கு வரவேண்டும்' என்றால் மக்களின் அடிப்படையான அபிலாசைகளை முதலில் மதிக்க வேண்டும். மக்களின் பங்களிப்பின் முதற்கட்டமான மக்களின் விமர்சனங்களுக்கு முகங் கொடுக்கப் பழகவேண்டும். வெறுமனே மேல் மட்டத்தினரின் நன்மைகளுக்கேற்பவும், அவர்களைத் திருப்திப்படுத்திக்கொண்டுமே புலிகள் தமது போராட்டத்தை நடத்துகின்றன. இப் போராட்டம் சாதாரண கீழ்மட்ட மக்களுக்கு எந்தவித நன்மையும் அளிக்காது.

தான் போராடுகின்றதென்று கூறும் தேசிய இனத்தின் அப்பாவி மக்களின் குரல்வளையை நெரித்துக்கொண்டு, அவர்களை ஓர் ஜனனாயக சூழலுக்கு வரத் தடுத்துக் கொண்டிருப்பவர்களால் முழுத் தேசியத் தன்மையுடன் மக்களுக்காக போராடமுடியாது.

'... முதல் எதிரி அரசு என்பதையும், புலி தவறிழைக்கும் ஓர் அரசியல் இயக்கம் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்' எனும்போது தமக்கு எதிரான கருத்துடையவர்களையும், மற்றைய இயக்கங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான போராளிகளையும் அழித்ததையும், இடதுசாரிகளைக் கொன்றும், மக்களின் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் போன்றவற்றை மறுத்தும், அப்பாவிப் பொதுமக்களை அவர்களது எல்லா யுத்தங்களின்போதும் கேடயமாகப் பாவித்தும், யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற மறுத்தும், வரி பவுண் போன்றவற்றை வசூலிப்பதும் சாதாரண 'தவறு' எனக் கருதுவ்து சரியானதா?

இன்று உண்மையான விடுதலையை வேண்டி நிற்பவர்களின் வாய்களை தமது துப்பாக்கிகளால் இறுக மூடி வைத்துக்கொண்டும் அவர்களுக்குத் தடையாகவும் இருக்கும் புலிகள் ஸ்ரீலங்கா அரசுக்குச் சமமாகவே தமிழ் மக்களின் எதிரியாகவிருக்கின்றனர் என அவர்களின் கடந்தகால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்கால நடவடிக்கைகள் எமக்கு காட்டுகின்றன.

புலிகள் முஸ்லீம்களை - வெளியேற்றியதிலிருந்து சிறுபான்மை தேசிய இனங்களை நசுக்க கூடியதென தெரிகிறது. இது வளர்ச்சிப் போக்கில் உயர் சைவ மேல் மட்டத்தினருடன் இணைந்து ஏனைய தாழ்த்தப்பட்ட இனங்களை நசுக்காது என்பதில் என்ன நிச்சயமிருக்கின்றது?

புலிகளிடமிருப்பது முதலாளித்துவ ஜனநாயகமென்றும், அது தனக்கு ஜனநாயகத்தைக் கோருகிறது, ஆனால் தனக்குக் கீழ்ப்பட்ட வர்க்கங்களுக்கு ஜனநாயகத்தை மறுக்கின்றது. தனது சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்துகிறது. பிறரது சுதந்திரத்தை நசுக்கத் தனது ஆயுதப் பலத்தை பிரயோகிக்கின்றது. தனது தேசிய இனத்தை, எல்லாத் தேசிய இனங்களையும் அவமதிக்கிறது . நசுக்கிறது எனவும் முதலாளித்துவ தேசியவாதத்திற்கும் முற்போக்குப் பாத்திரம் உண்டு எனவும் பிரஜைகள் கூறுவதைப்பார்க்குமிடத்து புலிகளின் ஜனநாயக மறுப்புகளை நியாயப்படுத்துவதாகவே அமைகின்றது.

உலகத்தில் சோசலிஸம் ஏற்பட்டதென கூறப்பட்ட நாடுகளில் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் போன்ற ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளினால்தான் சீரழிந்தன. இந்த ஜனநாயக மறுப்புகளையே தமது தன்மையாகக் கொண்டவர்கள் எமது தேசியத்திற்காகப் - போராடுவது என்பது இயலாத காரியம்.

.....

– நந்தினி

*

ஐரோப்பிய அகதிவாழ்வின் கொடூரம் நிரம்பிய எமது வாழ்வின் அழுகுரல்கள் உலகுக்கு தெரியாமல் போகுமோ என்று ஏங்கிய நிலையில் 'கனவை மிதித்தவன்' சிறு நம்பிக்கையுடன் நகருகிறது.

மனிதர்களை அதுவும் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு அகதியாக வரும் மனிதர்களை வெறும் பொருளாதாரவாதத்திற்குள் முடக்கி நடமாடும் ஜடமாகக் குறுக்கி மறைமுக வீட்டுக் காவலுக்குள் முடக்கும் ஐரோப்பிய அரசுகளால் நாம், நமது வாழ்விலிருந்தும், நம்மிலிருந்தும் அந்நியப்பட்டு, வாழ்வின் பொருளிழந்து வெறும் சல்லிக் கற்களாக உருமாறிய நிலையில், எமது ஆன்மாவைத் தொலைத்த நிலையில் வாழ்ந்துவரும் சூழலில் எமக்கேற்படும் துன்பங்களைத் நாமே அறியமுடியாது வாழும் நிலைமை நம்மில் பலருக்கு.

'கனவை மிதித்தவன்' மூலம் வெளிக்கொணரப்பட்ட அகதிவாழ்வின் அவலம் நிறைந்த பாலியல் முரண்பாடுகள் ஒன்றும் கற்பனையானதல்ல. முத்து சுயதிருப்தி இன்பம் கொண்டதும்,

www.tamilarangam.net

ஞானமும்,பாலகுமாரும் தன்னின சேர்க்கை மூலம் தமது பாலியல் தேவையை நிறைவு செய்வதும் அகதி வாழ்வின் அவலம் நிறைந்த நிஜமான பக்கங்களாகும். ஞானமும்,பாலகுமாரும் தன்னினச்சேர்க்கையில் ஈடுபடுமுன் ஜன்னல் ஊடாக உடலுறவுக் காட்சிகளைக் காண்கிறார்கள் . தொலைக்காட்சி மூலம் பாலியல் உணர்வுத் தூண்டல் காட்சிகளையும் காண்கிறார்கள். இந்த காட்சி விளக்கங்கள் யாவும் ஐரோப்பாவிலுள்ள பாலியல் தூண்டல் நிலைமைகளையும்,ஐரோப்பாவில் எப்படி மானிட பிறவுணர்வு வியாபாரப் பண்டமாக மாற்றப்பட்டுள்ளது என்பதையும் சுட்டி நிற்கிறது.

பார்த்திபனின் 'கனவை மிதித்தவன்' 50ஆவது அத்தியாயம் தரும் மானுட பிறவுணர்வின் முரண்பாட்டு விளக்கம் நம்மில் பலருக்கு ஆச்சரியமாகவும்,அவர்களின் மதிப்பீடுகளையெல்லாம் தகர்ப்பதாகவும் இருக்கக்கூடும். ஆனால் இன்றைய அகதிவாழ்வின் இன்னல் நிறைந்த கொடுமையான பக்கம் பார்த்திபனால் வெளிக்கொணரப்பட்டுள்ளது. ஏனெனில் மானிட வாழ்வை எவ்வளவு தூரம் இன்றைய ஆட்சி அமைப்புகள் நாசம் செய்து விட்டன என்பதையும்,உலகை ஆளும் வர்க்கம் மானுட ஜீவிகளுக்கு உண்மையிலேயே எதிரிகள் என்பதையும் சுட்டி நிற்கிறது.

. . . . .

— ஸ்ரீரங்கன்

# கொடி பறக்குது!

வெளிநாட்டில் இயக்க ஆதரவாளர் ஒருவரும்,இன்னொருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள்.

ஒருவர்— நாங்கள் முன்னமேயே வெளிநாடு வந்தவர்கள். மேலும் நாங்கள் வந்த காலத்தில் நாட்டு நிலைமையும் ஓரளவுக்குச் சீராகத்தான் இருந்தது. ஆனால் இன்றோ நாடு கொந்தளித்துக் — கொண்டிருக்கிறது. கொலைக்களமாக மாறியிருக்கின்றது. இந்தக் கட்டத்திலே நாட்டைவிட்டு வெளியேறுகின்ற மக்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ஆதர — எங்கள் போராளிகள் உயிரைக் கொடுத்து போராடிக் கொண்டிருக்கின்ற இந்தவேளையிலே இப்படியாக வெளியேறுபவர்கள் கடைந்தெடுக்கப்பட்ட துரோகிகள். வெளிநாடுகளில் உள்ள அகதி முகாம்களை நிரப்புவதற்காகத்தான் வந்துகொண்டிருக்கின்றார்கள். இதனால் தமிழராக,அதுவும் வீரராகப் பிறந்த எமக்கே தலைகுனிவு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருவர்— உங்களுடைய அப்பா, அம்மா, தம்பி, தங்கை எல்லோரும் அண்மையில்தானே இங்கே வந்தார்கள். அவர்களும் துரோகிகளா?

ஆதர — இல்லை. அவர்கள் எங்களின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னமே— யே இங்கே வந்துவிட்டார்கள்.

ஒருவர்— ஒரு பதிலும் கிடைக்— காமல் குழம்பிப்போயிருந்தேன். இப்போது தான் தெரிகிறது யார் துரோகிகள் என்று. பவுண் வாங்குவது வழமையான ஒன்று. அதை விட்டுவிடலாம். ஆனால் வெளியேறுகின்ற மக்களிடம்... இல்லை துரோகிகளிடம் பணமும், உறுதியும் பறிப்பதைப் பற்றி...?

ஆதர — காலங்காலமாகத் துரோகிகளிடமிருந்து உயிரைத்தான் எடுத்தோம். ஆனால் இப்போது பணத்தையும், உறுதியையும்தான் எடுத்து வருகிறோம். இதிலிருந்து எங்களில் ஏற்பட்ட புரட்சிகரமாற்றத்தை நீர் புரிந்திருக்கவேண்டும்.

ஒருவர்— நீங்கள் உணர்ச்சிவசப்படுகிறீர்கள். விளக்கமின்மையால்தான் வினா எழுப்புகின்றேன். சில நாட்களுக்கு முன் போர்நிறுத்தம் என அறிந்தேன். காரணம் யாதோ?

ஒருவர்— கிழக்கில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் முப்பதினாயிரம் மக்கள் வீடு, வாசல்களை இழந்திருக்கிறார்கள் என்பதால்.

ஒருவர்— உங்களுடைய சண்டை நடந்த காலத்திலே— யே கிழக்குப் பக்கத்தில் அறுபதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் அனைத்தையும் இழந்து, ஊசலாடும் உயிரோடு காடுகளில், கொடிய மிருகங்களுக்கிடையே தஞ்சம் புகுந்தார்களே! அப்போது நீங்கள் போர் நிறுத்தம் செய்திருக்கலாம் தானே?

ஆதர — எங்களுடைய போராட்டத்தின்போது தான் மக்கள் காடுகளில் தஞ்சமடையவேண்டி வந்தது. அது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் இன்று நிகழ்வதோ இயற்கையின் சீற்றம். என்றும் இயற்கைக்குத் தலைவணங்கும் எங்கள் தலைமை இந்த வெள்ளப்பெருக்கைப் பார்த்துப் போர் நிறுத்தம் அறிவித்தது ஒன்றும் புதிய விடயமல்ல.

ஒருவர்— அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையென இங்கே சிலர் கதைக்கிறார்கள். முதலில் பேசி அன்பானவர், கண்ணியமானவர் என இந்த உலகத்துக்குச் சொல்லியும்கூட அவர்கள் பேரைர் தானே தொடுத்தார்கள். மீண்டும் ஏன் பேச்சுவார்த்தை?

ஆதர — போராடுகின்ற உரிமை எங்களுக்கு மாத்

www.tamilarangam.net

திரம்தான் இருக்கிறது. அதேபோல பேசுகின்ற உரிமையும் எங்களுக்குத்தான். ஆதலால் தான் பேசுகிறோம்.

ஒருவர்– உங்கள் பதிலூனூடாக நாட்டிலே எஞ்சியுள்ள தமிழ் மக்களுக்கும்ஒரு முடிவு... மன்னிக்க வேண்டும் ஒரு விடிவு கிடைக்கும் போல் தெரிகிறது. உங்கள் இயக்கத்தில் இருந்த பெரியவர்கள் எல்லாம் வெளிநாட்டுக்கு வந்ததின் பின்னர் நாட்டிலே சின்னஞ் சிறுவர்களும், சிறுமிகளும் 'போராட்டத்தில்' பலியாகிக் கொண்டிருக்கிறார்களே. அந்த இளம் அரும்புகளுக்குப் பதிலாக இங்கே காலங்காலமாகப் பணம் சேர்ப்பவர்கள் தளத்தில் போய் நிற்கலாம்தானே? அதனூடாகப் போராட்டம் வலிமை பெறும் அல்லவா?

ஆதர – நீர் முன்பு வேறு இயக்கத்தில் இருந்தவர்– போலும். மிகவும் துரோகத்தனமான கேள்வி கேட்கிறீர். இதுவே தளமாக இருந்திருந்தால் உமது நெற்றியில்..

ஒருவர்– நீங்கள் மீண்டும் உணர்ச்சிவசப்படுகிறீர்கள் இங்கே பலர் இதைத் தானே கேட்கிறார்கள்?

ஆதர – அவர்கள் எல்லோரும் துரோகிகளே. வெளிநாடுகளில் எங்களின் வளர்ச்சியும், அதனூடாக ஏற்படும் வலிமையும் நாளைக்கு இந்தத் துரோகிகளுக்குத் தக்க பதிலைக் கொடுக்கும். ஒரு போராட்டத்திற்குப் பலவிதமான பங்களிப்புகள் இருக்கின்றன. அதில் இங்கேயுள்ள நிதிச் சேர்ப்பை எங்களால்தான் செய்ய இயலும் என்பது தலைமையின் முடிவு. எல்லோரும் போராடவேண்டிய சூழ்நிலை இன்னும் வரவில்லை. அப்படி வரும்போது கூட இங்கே நாங்கள் வாங்கியிருக்கும் கார்களையும், ஏனைய வசதிகளையும் எமது விடுதலைக்குஎப்படிப் பயன்படுத்துவது என்ற கேள்வி எழும்.

ஒருவர்– !!!!. அது சரி. முஸ்லீம் மக்களை ஏன் கொன்றீர்கள்?

ஆதர – கடந்த காலங்களிலே எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினூடாக உலகத்திலேயே தலைசிறந்த கெரில்லா அணியென்ற பெயரை எமது இயக்கம் தட்டிக்கொண்டது. உலகப் பிரசித்திபெற்ற பி.பி.சி. வானொலியே எமது இயக்கத்தை அங்கீகரித்துள்ளது. ஏனைய துரோகக் கும்பல்களை ஒழித்ததினூடாக எமது பலம் இன்னும் நிரூபிக்கப்பட்டது. அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட எமது வேட்டையினால் சிங்களவன் இன்று வரை எமைக் கண்டு மிரண்டு போகிறான். இவர்கள் யார் இந்த இஸ்லாமியர்கள்? அதனால் தான் நடந்தது கொலை. இன்று இவர்களும் மிரண்டு ஓடுகிறார்கள்.

www.tamilarangam.net

மற்றும்படி எமது பொறுப்பாளர் அறிக்கைவிட்டதுபோல் எமது இயக்கத்தைப் பொறுத்த வரையில் இவை முஸ்பாத்திக்கொலைகள்.

ஒருவர்— இப்போது மத்தியகிழக்கில் நடக்கின்ற யுத்தம் சம்பந்தமாக ஏதாவது சொல்வீர்களா?

ஆதர — சிங்களவன் தமிழீழத்தைப் பிடித்தது போலத்தான் சதாம் குவைத்தைப் பிடித்தான். அதனால்தான் குவைத்தியர்கள் அமெரிக்க நண்பர்களுடனும், நேச உணர்வுகொண்ட ஐரோப்பியர்களுடனும் இணைந்து போராடினார்கள்.. இன்று குவைத் விடுதலை பெற்றுள்ளது தமக்கு உதவிய அமெரிக்க மற்றும் ஏனைய நாட்டு நண்பர்களுக்கு விசுவாசமான ஆட்சி அங்கே கொடிகட்டிப் பறக்கும்.

ஒருவர்— நீங்கள்.. இல்லை உங்கள் இயக்கம் இஸ்ரேல் மொஸாட்டிடம் பயிற்சி எடுத்தாகவும், ஆயுதங்கள் பெற்றதாகவும் இன்னும் சில தொடர்புகள் சம்பந்தமாகவும் செய்திகள் உலவுகின்றதே?

ஆதர — எங்களுக்குத் தேவை விடுதலை. எமது பொறுப்பாளர் கூறியிருப்பதுபோல பேயுடன் கூட்டுச்சேர்ந்தாவது அதை.. அதாவது விடுதலையை வென்றெடுக்கின்ற சாணக்கியம் படைத்தது எங்கள் தலைமை. அதனால்தான் தமிழர்கள் தலைமையின் கவர்ச்சிப் படங்களை எல்லா வீடுகளிலும் வைத்து தமிழர்கள் வணங்கிவருகிறார்கள். மேலும் மொஸாட்டில் உள்ளவர்களும் மனிதர்களே.

ஒருவர்— அப்படியாயின் உங்களுக்குச் சர்வதேசரீதியாகத் தொடர்புகள் இருக்கின்றன என்று கூறுகிறீர்கள்.

ஆதர — ஆமாம். இவை எமது தலைமையின் ராஜதந்திரத் தொடர்புகள். கொலம்பியா, இஸ்ரேல் வரை இவை விஸ்தரிக்கப்பட்டுள்ளன. காரணம் நாங்கள் உலகத்திற்கே வழிகாட்டக்கூடிய நிலைமைகள் காலப்போக்கில் ஏற்படலாம்.

ஒருவர்— ஆதரவாளரே இவ்வளவு தூரம் அறிவு பூர்வமாகவும், அரசியல்ரீதியாகவும், ஆணித்தரமாகவும் பதில் தந்ததற்கு எனது நன்றிகள். இதோ பிடியுங்கள் இந்த மாத பணத்தை. நாளை உங்கள் கொடி எங்கும் பறக்க எங்களைப் போன்றவர்களின் ஆதரவுகள் என்றும் இருக்கும். ●

www.tamilarangam.net

மேற்குத் தேசத்தில்
மெலானியின்
மென்கரங்கள் சேர்த்து
அடிகளை நகர்த்தினேன் மெதுவாக.

துண்டிக்கப்பட்டது உறவு!

என் தோழிகளின்
தேசத்தவர்களின்
கொடூர நிலை கண்டு
விரிந்தது பார்வை.

கண்களுக்குக் கட்டுப்போட்டனர்!
யதார்த்தங்களைக்
குருடாக்கிவிட்டதாய் நம்பினர்!!


விசரி,
வே(ை)சதாரி,
அடக்கமில்லாதவள்,
ஆம்பிளை மாதிரி ....


என்னைக்
காயப்படுத்துமென
வார்த்தைகள் வீசினர்!

மண்ணை மீட்டல்,
மக்களின் உரிமை,
மாதரின் வீரம் ...

வெளியுலகில்
போதித்தவர்கள்
கதவுகளையும்,
இரும்புக் கம்பிகளையும் கொண்டு
வீட்டிலொரு
சிறைக்கூடம் செய்தனர்!

முடமாக்கும் முயற்சியால்
நான்
பலமாகிக் கொண்டிருப்பதை
செவிட்டுக் காதுகளுக்கு
உரத்துக் கூறுகிறேன்.






"ஈரோஸ் திரும்பவும் பாராளுமன்றம் வரப் போகுதாம். பேப்பரிலை நியூஸ் வந்திருக்குப் பாத்தியோ?"

"பாத்தனான். உது முதலேயே தெரிஞ்ச விசயம்தானே! உவங்கள் பாராளுமன்றத்தைவிட்டிட்டு வெளியிலை போகேக்கையே, உவங்கள் போனாலும் பதவி இருக்கும்தானே, எப்பிடியும் திரும்பி வருவாங்கள் நான் சொன்னனான்தானே (கலம் 32 இல்). ஞாபகம் இல்லையே?"

"ஞாபகம் இருக்குத்தான். ஆனால் நீ சொன்னதை விடக் கொஞ்சம் வித்தியாசமாய் இருக்கிறதைக் கவனிக்கேலயே? பாலகுமார் வரேல்லை"

"பாலகுமார் வரவில்லைத்தான். அவரும் யூனிபோம் – போட்ட புலியாகிவிட்டார் என்று செய்திகள் வருகின்றன. ஆனால் அதிலை என்ன வித்தியாசம்? பாலகுமார் எப்பவுமே ஈரோஸின் தலைவராக இருந்ததில்லையே!"

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

"யதார்த்தத்தில் நிலைமை அப்பிடித்தான் இருந்தது. பாலகுமார் இயக்கத்துள் மிகுந்த செல்வாக்குள்ள நபராக இருந்தார் என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அவர் ஒரு போதும் தலைமைத்துவத்தைக் கொண்ட ஒருவராக இருக்கவில்லையென்றே சொல்லப்படுகிறது. தனக்கும், பிரபாகரனுக்குமுள்ள 'தனிப்பட்ட' உறவு மூலமாக தன் இயக்கத்தைப் பாதுகாப்பதில் அவர் வெற்றி பெற்றிருந்தார் என்பதைத் தவிர இயக்கத்தின் அரசியல் மற்றும் ஸ்தாபன முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தி அவரிடம் இருக்கவில்லையென்றே சொல்கிறார்கள்"

"அப்ப அதையெல்லாம் யார் செய்தார்கள்?"

"பாலகுமாரின் அங்கீகாரத்துடன் எடுக்கப்பட்டதாகவரும் முடிவுகள் அனைத்தும் இயக்

www.tamilarangam.net

கத்தின் சங்கர்ராஜி 'போன்றவர்' களாலோ அல்லது இயக்கத்திற்கு வெளியே உள்ள பிரபாகரன் 'போன்றவர்' களாலோ தான் எடுக்கப்பட்டன. எப்படியோ புலியுடன் சங்கமிப்பதன் மூலமே ஈரோஸ் 'வாழ' முடியும் என்ற முடிவை அறிவித்தது பாலகுமார்தான்"

"அதிலும்கூட 35 பேர் கொண்ட மத்தியகுழுவில் 3பேர் தவிர ஏனையோர் தனித்து இயங்க முடிவெடுத்ததாக அறிவிக்கபடுகிறதே? அந்த மூவரில் எம். பி. பரராஜசிங்கமும் ஒருவராம்"

கொழும்பில் முன்னாள் ஈரோஸ் எம். பி. தில்லைநாதன் பத்திரிகையாளர் மகாநாட்டை கூட்டி பத்திரிகையாளர்களிடம் தமது முடிவு பற்றி அறிவித்து ஒரு வார காலத்தின் பின் இந்த உரையாடல் எனக்கும், நண்பருக்குமிடையில் நடந்தது.

இதே நேரத்தில் தான் பாலகுமார் தமிழீழ விடுதலைப் புலிகளின் 'தமிழீழ புனர் நிர்மாண புனருத்தாரண' (T.R.O.) வேலைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி வெளியாகியிருந்தது.

பத்திரிகையாளர்கள் தில்லைநாதனிடம் இதுபற்றி விசாரிக்கவில்லை. ஆனால் பாலகுமார் புலிகளால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறதே என்று கேட்டார்கள். இந்தக் கேள்விக்கு தில்லைநாதன் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகின்ற இந்த நேரத்தில் அவர்கள் பிரதிநிதிகள் அற்றவர்களாக இருக்க, தெரிவுசெய்யப்பட்ட தாம் வெளியில் இருப்பது சரியல்ல என்றும், தமிழ் மக்களின் புனர் நிர்மாண புனருத்தாரண வேலைகளுக்கு தாம் இயன்றதை செய்ய வேண்டுமென்றும் பாலகுமார் மத்திய குழு முடிவுப்படி கொழும்பு வரவேண்டும்; வரும்படி அவருக்குச்செய்தி அனுப்பப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார்கள்.

தேசிய இனப் பிரச்சினைக்குச் சமாதானமான ஒரு தீர்வைக் காண்பதில் தாம் அக்கறையாக இருப்பதாகவும், புலிகளும், பிற இயக்கங்களும் சேர்ந்து பேசவும் ஒரு சமாதானத் தீர்வு பற்றிய அரசுடனான பேச்சுவார்த்தைக்கு இந்தியா உதவிசெய்ய வேண்டும் என்று இலங்கை வந்திருந்த முன்னாள் அமைச்சர் சுக்ளாவிடம் தாம் கேட்டதாகவும் தெரிவித்தார்கள்.

"புலிகளுடைய புனருத்தாரணப் பணிக்கு பாலகுமார் — பொறுப்பாக நியமிக்கப்பட்டதற்கும், இதே காரணத்திற்காகத் தான் தாம் பாராளுமன்றத்திற்கு வருவதாக 'புதிய ஈரோஸினர்' அறவித்திருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ" என்று கேட்டேன் நான்.

"எனக்குத் தெரியவில்லை அப்படி இருந்தாலும் ஆச்சரியப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுவதற்கில்லை. ஆனால் ஈரோஸ் இங்கு வந்தபின்னும் கூட திரும்பவும் பழைய விதத்திலேயே–தான் செயற்படப்போகிறது என்றே நான் கருதுகிறேன்"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"காரணம் திரும்பவும் புலிகளிடம் பிடி இருப்பதுதான். பாலகுமார் புலிகளுடன் உள்ளார். கலைக்கப்பட்ட ஈராஸிலிருந்து விலகிய பல தொண்டர்கள் (தோழர்கள் என்று சொல்லக்கூடும்!) யாழ்ப்பாணத்தில் உதிரியாக இருக்கிறார்கள். கொழும்பிலுள்ள இந்த ஈரோஸினரின் நடவடிக்கைகள் பாலகுமாரினதும் பிற 'தோழர்'களினதும் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும்வரை ஈரோஸின் 'தனித்துவம்' என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று தெரியவில்லை. ஏற்கெனவே புலிகளின் 'வேண்டுகோளின்படியே' இவர்கள் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறினார்கள் என்பது தெரிந்ததுதானே"

"அப்ப இவர்கள் பாராளுமன்றம் வந்து என்ன செய்யப் போகிறார்கள்?"

"முதலில் உள்ளே இருந்து எதுவும் செய்யமுடியாத 'கையாலாகாத்தனத்தைக்' காரணம் காட்டி வெளியேறினார்கள். இப்போது வெளியே சென்றும் எதையும் செய்ய முடியவில்லையென்று உள்ளே வருகிறார்கள். நிறையச் செய்யவேணும் என்கிறார்கள்! . உண்மையில் பாராளுமன்றத்தினால் ஏதாவது செய்யமுடியுமா என்பதும், யாழ்ப்பாணமக்கள் தமக்கு அங்கே பிரதிநிதிகள் இல்லையென்று அழுதார்களா என்பது பற்றியும் இவர்கள் ஒன்றும் சொல்லவில்லை ! இவர்களுக்குத் தேவைப்படுவது பாராளுமன்றப் பதவியும், அது தரும் வாய்ப்புகளும்தான். அதை வைத்து ஏதாவது பிழைப்பு நடத்த முடியுமா என்ற நப்பாசைதான்!!"

"பாராளுமன்றத் தேர்தல்கள் நடந்தபோது தேர்தலில் பங்குகொள்ளுமாறு இவர்களை 'பணித்தது' புலிகள்தானே? பிறகு அவர்கள் விலகச்சொன்னபோது இவர்கள் விலகினார்கள். இப்போது திரும்பவும் போகச்-சொல்லியிருக்கலாம் என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் ஏன் புலி அப்படிச்சொல்கிறது என்றுதான் புரியவில்லை"

"அதில் வியப்பில்லை. புலிகள் மத்தியில் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையொன்–றை நடாத்துவதற்கான தயார் நிலையொன்று உருவாகிவருகிறது. அருளர், யாழ். மேயர் போன்றவர்கள் ஒரு சமஸ்டித் தீர்வு பற்றிப் பேசப் புலிகள் தயார் என்று அறிவித்தது புலிகளுடன் – பேசாமல் அல்லது புலிகள் அறிவிக்கும்படி சொல்லாமல் அல்ல, எனவே இது பற்றி பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க ஈரோஸ் உதவக்கூடும். என்று புலிகள் யோசித்திருக்க–

www.tamilarangam.net

லாம். அதற்காகவே அவர்களை பாராளுமன்றத்திற்குள் போகும் படி கேட்டிருக்கலாம்."

"அப்போ பாலகுமாரை அனுமதிக்காதது...?"

"பாலகுமார் எந்தமுகத்துடன் இனித் தான் திரும்பவும் இயங்கப்போவதாக அறிவிக்க முடியும்? ஒன்றில் அவர் புலிகளின் சனனாயக மறுப்புக்கு எதிராக நின்று போராடப் புறப்பட்டாலொழிய வேறு விதத்தில் புதிய பாராளுமன்ற வருகைக்கும் தமக்கும் உடன்பாடு இருப்பதாகத் தெரிவிக்க அவரால் முடியாது. மலையக ஈரோஸ் மட்டும் தனியாக இயங்கமுடியும் என்றும் மற்றையது கலைக்கப்பட்டுவிட்டது என்றும் பேசிய பாலகுமார் எப்படி இதைத் தெரிவிப்பது? எனவேதான் பிறர் மூலம் அதை சொல்ல அனுமதித்தார்களோ தெரியவில்லை"

"தமிழீழத்திற்கு மாற்றாக முன்வைக்கப்படுகிற சமஸ்டித் தீர்வுக்குப் புலிகள் ஒத்துவருவார்கள் என்று சொல்வது உண்மையாக இருக்குமா? அவர்கள் தமிழீழத்தைக் கைவிட்டு வருவார்களா?" என்று கேட்டேன் நான்.

"அவர்கள் சமஸ்டிக்கு ஒத்துவருவார்களா இல்லையா என்பதற்கான பதிலை, தமிழீழத்தைக் கைவிட்டுவிடுவார்களாவென்ற பதிலை அப்போதுதான் சரியாகச்சொல்ல முடியும்"

"அவர்கள் சொல்வதொன்று செய்வது இன்னொன்று என்று சொல்கிறாயா?" என்று கேட்டேன் நான்.

"அப்படி அல்ல. அவர்கள் சொல்வதற்கும், செய்வதற்கும் சம்பந்தமிருப்பதில்லை என்றேன்" என்றார் நண்பர்.

"உன்ரை பதிலுக்கும் என்ரை கேள்விக்கும் என்ன வித்தியாசம்" என்றேன் நான் எரிச்சலுடன்.

"சிந்தனைமுறைதான். நீ சிந்திக்கிற கோணம் வேறை நான் சிந்திக்கிற கோணம் வேறை. நீ அவர்கள் சொல்வதோ செய்வதோ இரண்டுமே பிழை என்ற முடிவிலிருந்து கதைக்கிறாய். அதாலை அப்பிடிக் கேட்கிறாய். நான் சரி, பிழை பற்றி உன்னைப்போல முடிவு செய்துவிட்டுக் கதைக்கவில்லை. அவ்வளவுதான்"

"நீ எப்பவுமே உப்பிடித்தான். புலிகளை ஏதாவது ஒரு விதத்தில் தூக்கிப் பிடிக்கிறது உனது வேலையாகியே போய்விட்டது. உங்களுக்குப்பட்டாலும் அறிவு வராது" என்று சொன்ன நான்கேட்டேன்: "சரி எப்பிடியோ சமஸ்டித் தீர்வுக்கு அவர்கள் வருவதெண்டாலும் அது தமிழீழத்தைக் கைவிடுவதுதானே?"

நண்பருக்கு எனது பதில் உறைக்கவில்லை. கேள்விக்கு மட்டும் பதிலைச் சொன்னார்!! அப்பிடிச் சொல்ல முடியுமா? இதை ஒரு இடைக்காலத் தீர்வாகத்—தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீ யோகியின் பேட்டி

www.tamilarangam.net

யைப் படிக்கேலையே?"

"படிச்சனான். ஆனால் யோகி சமஸ்டியைப் பற்றியே கதைக்கேலை. நீ அவர்களுக்கா ண்டி வியாக்கியானம் செய்யா தை. அவர் மாகாணசபையைப்ப ற்றித்தான் சொல்லுறார். அ தோடை அந்தப் பேட்டியிலை அவர் எங்கையும் தமிழீழம் எண் ட சொல்லைக்கூடப் பாவிக் கேலை"

"சரி, சரி. கொஞ்சம் பொறு. சுயநிர்ணய அடிப்படையி லான தீர்வொன்றை ஒற்றையா ட்சி அரசியலமைப்புக்குள் கொ ண்டுவருவது என்று அவர் சொல் வது வேறு எதைப் பற்றி..? அது சமஸ்டி அல்லாமல் வேறெ ன்ன?"

"சமஸ்டியை ஒற்றையாட் சி என்று சொல்லலாமா? அப் பிடியெண்டால் அதை ஏன் யோ கி கிளியரா சொல்லேலை?"

"ஏன் கிளியரா சொல்-லேலை எண்டு அவங்களைத்தா ன் கேக்கவேணும். மற்றது ஒற் றையாட்சி எண்ட சொல்லுக்கும் (Unitary) சமஸ்டிக்கும் இ டையில் முரண்பாடு இல்லை. சம ஸ்டி ஓரளவு சுயாதீனத்தைத்தந் தாலும் அது இன்னமும் ஒற்றைய ட்சித் தன்மையை கொண்டதுதா ன். ஆனால் அதுதான் புலிகளின் மனதில் இருப்பது. பழைய தமிழ ரசுக் கட்சி கேட்டதும் அதைத் தான். அந்தப் பேட்டியிலை யுத் தத்தைத் தொடங்கினது அரசு தான் எண்டு சொல்லப்பட்டிருக் கிறதைக் கவனிச்சியா?" என்று கேட்டார் நண்பர்.

யோகியின் அந்தப்பேட்டி 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளி வந்திருந்தது. கடந்த யூன்மாதம் தொடங்கிய யுத்தத்திற்கு உண் மையில் காரணம் நாம் அல்ல, அரசே என்று அடித்துச் சொல் லியிருந்தார். அவர் சொன்ன க ருத்துகள் எனக்க இப்பவும் ஞா பகத்தில் இருந்தது. ஏனென்றால் 14 மாதகாலப் பேச்சுவார்த் தையில் தாம் என்ன பேசினோ மென்றோ, தாம் ஏன் சண்டை பிடிக்கவேண்டி வந்தது என்றோ புலிகள் தரப்பில் ஓரளவு தெளி வாக முன்வைக்கப்பட்ட கருத்து கள் என்றால் அது யோகியின் 'ஐலண்ட்' பத்திரிகை கேட்டி தான். அவர் சொல்லியிருக்கிறா ர்:

'அரசாங்கம் நாங்க தான் சண்டையைத் துடக்கினதெ ண்டு பிரச்சாரம் செய்யுது. ஆ னால் உண்மை மற்ற மாதிரி. அரசுதான் அதைத் தொடக்கின து. ஐ.பி.கே.எவ். போனது டன் மற்ற சமூக விரோதக் கோஷ்டியளோடை பேச்சு வார்த்தை நடத்திய அரசாங்க ம் அவையளை இராணுவத்தோ டை சேர்த்து உளவறிய அனுப்பி ச்சுது. இதைப் பற்றி நாங்கள் பிரேமதாசவோடை கதைச்ச னாங்கள். அவர் அப்ப அதை மறுத்தார். இப்ப தெரியுது எல் லாம் உண்மையெண்டு. அதோடை அவர் திட்டமிட்ட குடியேற்றத்தி ட்டத்தை அகற்றினது எண்டு

www.tamilarangam.net

சொன்னார். ஆனால் அது தொடர்ந்து நடந்தது. 6ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கிறதெண்டு ஒப்புக்கொண்டார். பிறகு அதுக்கும் ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை. வடக்கு, கிழக்கில் புதுத் தேர்தலை வைக்கிறதாய் சொ

ன்னார். அதையும் பிறகு உடனடியாய் செய்யேலாதெண்டு சமாளித்தார். நாங்கள் வரி வசூலிக்கிறது போன்ற 'சாதாரண' விசயங்களைப் பெரிது படுத்தினார். எதிர்க்கட்சி எதிர்க்குதெண்டு சொன்னார். எதிர்க்கட்சிகளைத் தன்ரை சொந்த விசயத்திலையெண்டால் கணக்கெடுக்கவும் செய்யாத அரசாங்கம் எங்கடை பிரச்சினை எண்டவுடன எதிர்க்கட்சியள் எதிர்க்கிறதால ஒண்டும் செய்யேலாமல் கிடக்குது எண்டு பம்மாத்துவிட்டுது.. வடக்குக் கிழக்குக்கிருந்த சிங்கள கவர்னரை மாற்றி விட்டு தமிழாளைப் போடுறதுக்கும், திருகோணமலைக்கு தமிழ் அரசாங்க அதிபர் ஒருவரை நியமிக்கவும் அம்பாறைக்கு ஒரு மேலதிக (முஸ்லீம்) அரசாங்க அதிபரை நியமிக்கவும் ஒப்புக்கொண்டார் பிரேமதாச. பிறகு இப்ப சரியான சூழ்நிலை இல்லையெண்டு சொல்லி ஒண்டையும்செய்ய அவர் முன்வரயில்லை.

மாகாண தமிழ் பேசும் பொலிஸ்படையை உருவாக்கிறது எண்டும், அதுவரை புதுப் பொலிஸ் நிலையங்களை திறக்கக்கூடாதெண்டும் பிரேமதாசவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தோம். சிங்களவர் சிங்களப் பிரதேசங்களிலை வேலை செய்யட்டும். தமிழ்ப் பிரதேசங்களிலை தமிழர்களைக் கொண்ட பொலிஸ் படை தயாரானதும் புதுப்பொலிஸ் நிலையங்களை உருவாக்குவோம் என்று நாம் சொன்னோம். ஆனால் அரசாங்கம் மேலும் மேலும் சிங்களப் பொலிசாரையும், பழைய முஸ்லீம் ஊர்க்காவற்படைகளையும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளுக்கு அனுப்பியது. இதிலை பல சிங்களப் பொலிஸார் எஸ். ரி. எவ். விலிருந்து வந்தவர்கள். ஆர். பி. ஜி, ஏ. கே எஸ். எம். ஜி., மோட்டார் .. போன்ற சக்தி வாய்ந்த ஆயுதங்களை வைச்சிருந்தார்கள். இது சந்தர்ப்பம் வரும்போது அரசாங்கம் இந்தப் பொலிஸ்நிலையங்கள் எல்லாத்தையும் இராணுவ முகாமாக்கிக் கொள்ளும் நோக்கத்துடனான செயல்தான்.

அதோடை பிரேமதாசா படைக்கு இன விகிதாசார அடிப்படையில் ஆட்களைச் சேர்ப்பதாக சொல்லிவிட்டு தொடர்ந்து சிங்களவர்களை மேலும் மேலும் சேர்த்துக் கொண்டிருந்தார். அதோடை தங்கடை வே

வுபாக்கிற பிளேனுகளை எல்லாம் எங்கடை அலுவலகங்களுக்கு மேலாக பறக்கவிட்டாங்கள். மட்டக்களப்பு பொலிஸ் ஸ்ரேசனில் பல பிரச்சினைகள் இருந்ததாலை அங்கிருந்து சிங்களப் பொலிஸாரை வெளியேற்ற அரசு ஒப்புக்கொண்டது. ஆனால்

www.tamilarangam.net




பதிலாக மேலும் சிங்களப்பொலிஸாரை அங்கு கொண்டு வந்துவிட்டது. இதிலை இருந்துதான் சண்டை தொடங்கினது.

இந்த அரசாங்கம் அறுபதினாயிரம் சிங்களவர்களை தெற்கில் கொலை செய்துவிட்டது. இதாலை வரப்போற பிரச்சினையைத் திசை திருப்ப சண்டையை அரசாங்கமே உருவாக்கிவிட்டுள்ளது...' என்று யோகி சொல்லியிருந்தார்.

இந்தப் பேட்டியைப் படித்தபோது எனக்குச் சிரிப்பும் ஆத்திரமும் மாறி மாறிவந்தது. இப்போது நண்பர் இவை பற்றி கேட்டபோது ஏன் அப்பிடிக் கேட்கிறார் என்று எனக்கு விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவரிடமே கேட்டு வைத்தேன்.

"கவனிச்சனான். ஏன்?"

"அந்தக் காரணங்களை எல்லாம் சண்டை தொடங்க முதலே சொல்லியிருக்கலாம்தானே? யுத்தம் தொடங்கினதுக்குப் பிறகு தொகுக்கப்பட்ட காரணங்கள்தான் இவை என்று தெளிவாகவே தெரியுது. முதலிலேயே இவற்றைச் சொல்லியிருந்தால் யுத்தத்திற்கு ஒரு அர்த்தம் உருவாகியிருக்கக்கூடும். இலங்கையரசு அம்பலமாக வாய்ப்பிருந்திருக்கும். ஆனால் மாறாகத் தற்போது அம்பலப்பட்டது புலிகள்தான். உண்மையில் யுத்தம் தொடங்கப்படுவதற்கான சூழல் நிலவியது. பிரேமதாச சொன்னதை செய்வான் எண்டு கொஞ்ச அரசியல் அனுபவம் உள்ளவனும் நம்பமாட்டான். ஆனால் புலிதான் அதை நம்பினது. அவர்களை யார் நம்பச் சொன்னார்கள்? தமிழ்மக்களா? தெற்கிலை 60 ஆயிரம் பேரைக் கொலைசெய்தது பற்றி இப்ப யோகி சொல்லுறார். ஆனால் புலியள் இலங்கை அரசாங்கத்தோடை சேர்ந்துநிண்டுகொண்டு மனித உரிமைகள் மகாநாட்டில் 'இலங்கையில் மனித உரிமைகள் மீறல் இல்லை' என்று சாட்சி சொன்னது அவருக்கு மறந்து போச்சுதுபோல. அப்ப என்ன 60ஆயிரம் கொ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லைகளும் ஜெனிவா மகாநாட்டுக்குப் பிறகு நடந்த கொலையளோ?......

....நான் என்ன சொல்ல வாறனெண்டால் சொல்வதற்கும், செய்வதற்கும் சம்பந்தம் இருக்காது என்பதைத்தான். ஆனால் அவர்களது போக்குக்கு ஒரு தொடர்ச்சி இருக்கிறது. அவர்கள் தமிழீழத்தை விடுவார்களா இல்லையா என்பதல்ல, அவர்களது மனதிலே இருப்பதை சமஸ்டி தீர்த்து வைக்குமா என்பதைப் பொறுத்துத்தான் பிரச்சினையாக இருக்கும்"

"அதென்ன அவர்களது மனதிலே இருக்கிறது?"

"அது அவர்களுக்கே தெரியாது. தமிழீழம் என்ற ஒற்றைச் சொல்லால் அவர்கள் அதைச் சொன்னபோதும், அதற்குரிய எந்தத் தெளிவான திட்டமும் அவர்களிடம் இல்லை. இலங்கை அரசாங்கத்துடன் யுத்தம் செய்வது, அதன்பின் பேச்சுவார்த்தை நடத்துவது, மறுத்தால் திரும்பவும் யுத்தம் செய்து அரசை இறங்கி வரச்செய்வது–இது தான் புலிகளின் நோக்கம். ஒவ்வொரு யுத்தமும் ஒரு நோக்கத்தைக்கொண்டதாகத்தான் இருக்கும். ஆனால் புலிகளின் ஒவ்வொரு யுத்தமும் அரசாங்கத்தைப் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வரச்செய்வதையே நோக்கமாகக் கொண்டன. அதனால் தான் அவர்கள் எப்பவுமே தங்களை ஒரு 'கெரில்லாக்குழு' என்று பெருமையாகக் கூறிக் கொள்கிறார்கள். தமது யுத்தம் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கான யுத்தம், 'இன அழித்தொழிப்பிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கும்' யுத்தம் என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். பாதுகாப்பு யுத்தம் என்ற மட்டத்திற்கு மேலே எதையும் அவர்கள் சிந்திப்பதாக தெரியவில்லை"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?" – இது நமன்.

"அதுதான் அவர்களின் 'அரசியலின்' தன்மை. அவர்களது அரசியல் விடுதலை அரசியலல்ல. மாறாகத் தடுப்பு யுத்தத்திற்கான, அரசுடன் பேசுவதன் மூலமாக ஏதாவது ஒரு சமரசத்திற்கு வருவதற்கான அரசியல் தான். அவர்களது தாக்குதல்கள் –அது சிங்கள மக்கள் மீதானதென்றால் என்ன, முஸ்லீம் மக்கள் மீதானதென்றால் என்ன, இராணுவம் மீதானதாயிருந்தாலென்ன – எல்லாம் ஒன்றில் இந்தியா மூலமாக அல்லது உள்ளூர் கட்சிகள் மூலமோ இலங்கையரசை நிர்ப்பந்தித்து தம்முடன் பேச இழுக்கும் நோக்கத்தையே அடிப்படையாகக்கொண்டது. அதன் இந்தத் தத்துவத்திற்கு குரு இந்தியாதான். 'தமிழீழம்' என்று சொன்னபோதும் அதை விடுவிக்கிறது என்பது குறித்து அதற்கு அச்சமே நிலவுகிறது. இந்தியா போன்ற வல்லாதிக்கச் சக்திகள் குறித்தும், மக்கள் குறித்தும் புலிக்கு அச்சம் இருப்பதால் அது ஒருபோதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழீழத்தை' அடையமுடியாது. எப்படியோ ஒரு சமரசத் தீர்வுக்கு வரவே முயற்சிக்கும். ஆனால் இந்தச் சமரசச் தீர்வு இலங்கையரசால் வழங்கப் பட முடியாததாக இருப்பதுதான் இங்குள்ள சிக்கல்."

"ஏன் அதை வழங்குவதில் அரசுக்கு என்ன பிரச்சினை?"

"புலிகளின் 'தமிழீழம்' அல்லது கோரிக்கை ஒரு சுயாதீனமான அரசியலமைப்பு வடிவம். (அதை அவர்கள் தற்காலிகம் என்று சொல்லிக் கொள்ளலாம்.) அது 'தமிழ் மக்களுக்கு' சில பொருளாதார, அரசியற் சுதந்திரத்தை இலங்கை அரசிடமிருந்து கோருகிறது. இந்தத் 'தமிழ் மக்கள்' பரந்துபட்ட தமிழ் மக்கள் அல்ல என்பது முக்கியம். ஆனால் அதை வழங்குவது இலங்கையரசின் - பௌத்த பேரினவாத அடிப்படையிலான அரசின் ஸ்திரத் தன்மைக்கு ஆபத்தானது..."

"அப்ப என்னதான் நடக்கும்?"

"புலிகள் திரும்பவும் யுத்தத்தை நடத்தி வருகிறார்கள். இவர்களது யுத்த நிறுத்தக்கோரிக்கையை அரசு நிராகரித்துவிட்டது. புலிகளைத் தனிமைப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளதால் இராணுவ ரீதியாக அழித்துவிடலாம் என அரசு நம்புகிறது. புலிகளுக்கோ 'எமது மக்களை பாதுகாப்பது!' என்பதற்கு அப்பால் போகமுடியவில்லை. எதையும் யோசிக்கவும் முடியவில்லை. மக்களைத் திரட்டுவதோ, ஐக்கிய முன்னணியோ அவர்களால் நினைத்துப் பார்க்க முடியாதது. அது ஒன்றுதான் அவர்களை விடுவிக்கும் என்றபோதும் அவர்கள் அதை விடாப்பிடியாக எதிர்த்து வருகிறார்கள். உள்நாட்டில் சனநாயகம் இல்லாத தேசிய யுத்தம் என்பது காலிழந்த போர் வீரனைப் போன்றது. கையில் துப்பாக்கி இருக்கும்வரை புலிக்குத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அவ்வளவுதான். அதற்கு மேல் அதனால் முன்னேறமுடியாது. விடுதலையையே காலப்போக்கில் - அது மறந்துவிடும். தனது வாழ்வுக்கான போராட்டமாக இதை மாற்றிவிடும். ஆக இது ஒரு மாபெரும் தேக்கம்தான்"

"இந்தத் தேக்கம் உடையாதா?"

"உடைய வேணும். உடைக்கப்படவேணும் என்பது உண்மை. ஆனால் இது கூட்டணியின் தேக்கத்தை உடைத்துக்கொண்டு ஆயுதப் போராட்டக் குழுக்கள் மேலே வந்ததுபோல இலேசானதல்ல. ஏனென்றால் அப்போது போராட்ட வடிவம் மாறுபட்டதேயொழிய அதன் அடிப்படை அரசியற் சிந்தனையில் எந்தக் குணாம்ச வேறுபாடும் இல்லை. சிற்சில அளவு ரீதியான வேறுபாடுகள் இருப்பினும், இன்னமும் நிலைமை பழையதே. அதில் மாற்றமேற்படவில்லை.

www.tamilarangam.net

முதற் கட்டத்தில் போராட்ட வடிவத்தை மாற்றுவதன் மூலம் இந்தத் தேசியப் – போராட்ட இயக்கம் அந்தத் தேக்கத்தை உடைத்தது. இப்போது வேறு போராட்ட வடிவம் ஒன்றின் மூலமாக இந்தத் தேக்கத்தை உடைக்கமுடியாது. ஏனென்றால் அதியுச்ச ஆயுதப் போராட்டத்திற்கு (வடிவத்திற்கு) எமது தேசிய இயக்கம் வந்தாயிற்று. இப்போது மாற்றப்படவேண்டியது போராட்ட வடிவமல்ல. அடிப்படைச் சிந்தனையே. அது உடைக்கப்படாமல் போராட்டம் அடுத்த கட்டத்திற்கு வளரமுடியாது.

தமிழ் மக்களிடையேயும், போராளிக்குழுக்களிடையேயும் அவை எவ்வளவுதான் முரண்பாடுகளையுடைய குழுக்களாக இருப்பினும் ஆதிக்கம் செலுத்தும் கூட்டணி கால சமரசவாதச் சிந்தனைமுறை தகர்த்து எறியப்படவேண்டும். அதற்கான போராட்டத்தை நடத்துவதுதான் இப்ப இருக்கிற ஒரே வழி"

"இப்ப ஒரு புதுக் கதை அடிபடுகுதே, கேள்விப்பட்டியா? பிரபாகரனுக்கும், மாத்தயாவிற்குமிடையிலை பிரச்சினையெண்டும், பிரபாகரன் மாத்தயாவுக்கு பவர் இல்லாமல் பண்ணிவிட்டார் எண்டும், புலிகளின் மக்கள் முன்னணிக்கு இப்ப எந்த அதிகாரமும் இல்லை. பழையபடி அசல் புலிகள்தான் ஆதிக்கம் எண்டும் கதைக்கினம்..."

"இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"எதைப்பற்றி நீ கேட்கிறாய்?"

"மாத்தயாதானே பேச்சுவார்த்தைக்குப் போகவேணுமெண்டு வலியுறுத்தினவராம். பிரபாகரனுக்கு ஆரம்பத்திலிருந்தே இதிலை நம்பிக்கை இல்லையாம். எனவே பிரபாகரனுக்கு 'இறுதி வரை போராடும்' எண்ணம் இருக்கிறது–அதாவது தமிழீழம் வரும்வரை!!. இதுக்கும் உன்ரை தேக்கத்தை உடைக்கிற பிளானுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையோவெண்டு கேக்கிறன்"

"இறுதிவரை போராடுவது, தமிழீழம் காண்பது எண்டதுகள் பிரபாகரன்ரை 'விருப்பம்' எண்டு வைச்சுக்கொண்டாலும், அதுக்கு என்ன வழி? பிரபாகரன் ஜனநாயகத்தை அனுமதிக்கத் தயாரா? . ஐக்கிய முன்னணிக்குத் தயாரா? அதுதான் – போராட்ட வெற்றிக்கே அடிப்படையானது"

"புலியள் 'ஜனநாயக' வழிக்குத் திரும்புறதும், ஐக்கிய முன்னணி கட்டுறதும் ஒருகாலமும் நடக்கப் போறேல்லை. நீங்கள் கொஞ்சப் பேர் அவங்களைத் 'தேசியத் தன்மை' கொண்டவங்களெண்டு சொல்லி சும்மா மக்களையும் பேக்காட்டிக்கொண்டு இருக்கிறது தான் நடக்கப் போகுது"

எனது எரிச்சல் நண்பருக்குச் சிரிப்பைத்தான் வரவழைத்தது. (தொடர்ச்சி 34 ஆம் பக்கம்).

www.tamilarangam.net

# செய்திக் குறிப்பு

01.02.91 வீரகேசரி

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டவும் தவறியதற்காக மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு 30.12. நள்ளிரவு பதவி நீக்கம் செய்யப்பட்டதோடு ஜனாதிபதி ஆட்சியும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு சட்டசபையும் உடனடியாகக் கலைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இந்தியப்படை இனி என்றுமே அனுப்பப்படமாட்டாதென்று உறுதி எதவும் வழங்கப்படவில்லை. எவரும் அவ்வாறு உறுதி கோரவில்லை — இந்திய வெளியுறவுச் செயலாளர்

02.02.91 வீரகேசரி

மடுல்கொல அரச தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த எம்.சுப்பிரமணியம் என்ற தொழிலாளி அரசபடைகளால் விசாரணைக்கென அழைத்து செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

03.02.91 வீரகேசரி

போக்குவரத்து நெருக்கடிகள், கெடுபிடிகள் காரணமாக யாழ்க்குடா நாட்டில் உணவுப் பொருட்கள், பாவனைப் பொருட்களுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுவதுடன் மிக அரிதாக அங்கு போய்ச் சேரும் பொருட்களின் விலையும் மலை போலுயர்ந்துள்ளதாகவும், தொடர்ந்து நிலவும் யுத்த நிலைமைகள் காரணமாக தொழில்கள் எதனையும் செய்ய முடியாத நிலையில் தொழிலாளர்களும், வறிய மக்களும், ஓய்வூதியத்தை மட்டுமே நம்பி வாழ்பவர்களும் ஒருவேளை உணவோடு வாழ்க்கையை ஓட்டவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தி.மு.க. அரசு பதவிநீக்கம் செய்யப்பட்டது தமிழ்நாட்டு மக்களின் மனித உரிமைகளுக்கு எதிரான பலத்த அடி — புலிகளின் பேச்சாளர்

04.02.91 வீரகேசரி

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு பகுதியில் பாடசாலையொன்றில் தங்கியிருந்த திருகோணமலையைச் சேர்ந்த அகதிகள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 16க்குமேற்பட்ட அகதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை முறிவுற்றதைத் — தொடர்ந்து நீதிக்கு அப்பாற்பட்ட கொலைகள் இரட்டிப்பாகியுள்ளதாகவும், அரச பாதுகாப்புப்படைகள்

பொலிஸ், விழிப்புக்குழுக்கள், பிரிவினைவாதக் குழுக்கள் ஆகியவை மேற்கொள்ளும் அரசியற் கொலைகள் முக்கிய மனித உரிமைகள் பிரச்சினையாக இருந்துவருவதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மனித உரிமைகள் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

05.02.91 வீரகேசரி

மறிகண்டியில் இடம்பெற்ற பொம்பர் விமானத் தாக்குதலில் ஒருபெண் உட்பட 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

35 பேரைக்கொண்ட மத்திய குழுவில் 31பேர் புலிகளுடன் இணையாது தனித்துச் செயற்படுவதென்று தீர்மானித்துள்ளனர். பெரும்பான்மை உறுப்பினர்களின் முடிவின்படி ஈரோஸ் தனித்துவமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளது. இலங்கை அரசாங்கம் எமது எம்.பி.க்களுக்குப் பாதுகாப்பு வழங்கவிருக்கிறது. எமக்கு இன்றைய ஜனாதிபதி மீது நம்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

க்கையுண்டு - ஈரோஸ்

06.02.91 வீரகேசரி

பொத்துவில் பத்தியில் 1305தமிழ் குடும்பங்கள் கடந்த ஜூன் மாதம் ஏற்பட்ட மோதல்களையடுத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டு, தங்களின் உழைப்பாளிகள் 345 பேரின் உயிரையும் பறிகொடுத்து, உடைமைகளையும் இழந்து கோமாரி எனும் கிராமத்தில் அகதிகளாக வசித்து வருகின்றன. பெற்றோரை இழந்து அநாதைகளாகியுள்ள குழந்தைகள் வெளி மாவட்டங்களிலுள்ள சிங்கள வீடுகளுக்கு ஆயாவாகவும், தொழிலாளியாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

08.02.91 தாயகம்

இலங்கையின் ஒற்றையாட்சிமுறைக்கு கீழான ஒரு சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுக்குத் தாம் தயார் என்று புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி கொழும்புப்பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு கச்சேரியை வந்தடைந்த 10ஆயிரம் பேரைக்கொண்ட பேரணியொன்று யாழ் அரச அதிபரிடம் விமானத் தாக்குதலை நிறுத்துதல், விலைவாசியைக் கட்டுப்படுத்தல், பதக்கலை ஒழித்தல் ஆகிய கருத்துகளை முன்வைத்து மகஜர் சமர்ப்பித்தனர்.

மட்டக்களப்பில் 7 கிராமங்களில் அரசபடைகள் தாக்கியபோது தப்பியோடிய கிராமவாசிகளில் 25 பேர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர்.

11பேர் அரசபடைகளினால் கொல்லப்பட்டுள்ளனர். தேடியழிக்கும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவம் - 222 குடிசைகளையும், 100க்குமேற்பட்ட நெல் மூடைகளையும் எரித்துள்ளது.

வளைகுடாப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தற்போது சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 450 மில்லியன் கடன் பெற முயன்று வருகிறது. இந்தக் கடனை வழங்கும் பட்சத்தில் சர்வதேசநாணய நிதியம் விதிக்க இருக்கும் நிபந்தனைகளுள் ரூபாவின் பெறுமதியைக் குறைத்தல், அரச வேலை வாய்ப்புகளில் குறைப்புச் செய்தல், உணவு, எண்ணெய், போக்குவரத்து என்பவற்றுக்கான மானியங்களைக் குறைத்தல் என்பன அடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சில நேரங்களில் இலவசக் கல்வியிலும் கைவைக்கப்படலாம்.

இலங்கை அரசு தனது ஆயுதப்படைகளைப் பலப்படுத்தும் முயற்சியிலிறங்கியுள்ளது. கவச வாகன அணிகளுக்கு ரி85 ரக மென்ரக தாங்கிகளும், வை.டபிள்யூ531 ரக வாகனங்களும் கிடைக்கவுள்ளன. பீரங்கிகளும் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்ட நீரிலும், நிலத்திலும் செல்லக் கூடிய இக் கவச வாகனங்கள் சீனாவிலிருந்து பெறப்படவுள்ளன. விமானப்படைக்கு பெல் ஹெலிகளும், மார்செட்டி விமானங்களும், சீனாவிலிருந்து 1212ரக நான்சாங் சண்டை விமானங்களும் கிடைக்கவுள்ளன. கடற்படைக்கு கொரிய, சீன ரோந்து படைகள் கிடைக்கவுள்ளன. ஏற்கெனவே இஸ்ரேலிய ட்வேரா ரக படகுகள், பிரிட்டிஷ் கூவகர் ரகப்படகுகள் என்பன கடற்படையிடம் உண்டு.

08.02.91 வீரகேசரி

வடக்கில் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான விமானக்குண்டுத் தாக்குதல் குறித்து உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் விமானப்படை உயரதிகாரியிடம் முறையிட்டனர்.

றிச்சர் டி சொய்ஸா கொலைவிவகாரத்தில் எதையோ மறைப்பதற்கு அரசு விரும்புகிறது. அதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் அதிகாரிகளையும் பாதுகாக்க முயல்கிறது - சிறிமா

09.02.91 வீரகேசரி

பெருநாள் முற்பணம் வழங்குவதற்காக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து முற் கூட்டியே மாதாந்தம் 75 ரூபா கழிக்கப்படுவதை தோட்டத் தொழிற் சங்கங்கள் ஆட்சேபித்துள்ளன. இந்த

நடவடிக்கையை ஆட்சேபித்து பல தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது சம்பளத்தையே பெற்றுக்கொள்ள மறுத்து வருகின்றனர்.

மாவிட்டபுரம், தச்சன்காடு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற மோதலில் பலியான 20க்கும் மேற்பட்ட



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் சடலங்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள அவர்களின் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிச்சடங்குகள் நடைபெற்றன. இவர்களின் மரணங்களையொட்டி குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தென்னிலங்கையில் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டோரைப் பற்றித் தகவல்கள் இல்லாமலிருப்பதற்கு ஆதாரங்கள் உண்டு. வடக்கு, கிழக்கில் இதனைவிட பலமடங்கு மோசமான நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. இதனால் தென்னிலங்கை அன்னையர்முன்னணி வடக்கு, கிழக்கில் இயங்கிவந்த அன்னையர் முன்னணியுடன் இணைந்து செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடிகாரர்கள் எமக்குத் தேவை. அவர்கள் இருப்பதால்தான் அரசியல் மேடைகள் நிறவப்படுகின்றன. அதேபோல் தேர்தல் காலங்களில் முன்னே சென்று எமக்கு ஆதரவுதேடித் தருகின்றனர். எமது எதிர்க்கட்சியினரின் கூட்டங்களை நாசமாக்குவதற்கு அவர்கள் பயன்படுகின்றனர். குடிகாரர்களுக்கு எதிராகப் பேசினால் எமக்குப் பாராளுமன்றம் செல்லமுடியாதநிலை ஏற்பட்டுவிடும் – சர்வோதயத் தலைவரிடம் அரசியற் தலைவர் ஒருவர்

ஜனவரி 20க்கும் 23க்கும் இடையில் வல்வெட்டித்துறையில் 300 பீப்பாய்க் குண்டுகள் போடப்பட்டதால் வீடுகள், கோவில்கள், கடைகள் பாடசாலைகள் என்பவை நிர்மூலம் ஆக்கப்பட்டுள்ளன.

10.02.91 வீரகேசரி

வளைகுடாவில் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து மன்னார்ப் பகுதியில் இ.போ.ச. பஸ் சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. பேசாலையிலிருந்து மன்னாருக்கு மாட்டுவண்டியில் பயணம் செய்வதற்கு 600 ரூபா கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

கடந்த 6 மாதங்களுக்குள் யுத்தத்தினால் 6 ஆயிரம்பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்க விமானங்களும், கப்பல்களும் இலங்கையில் எரிபொருள் நிரப்பிச் செல்ல அனுமதிக்கும் தீர்மானம் அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டது. அத் தீர்மானத்திலிருந்து நாம் விலகிச் செல்லப் போவதில்லை– வெளியுறவு அமைச்சர்

11.01.91 வீரகேசரி

வவுனியாவுக்கு வடக்கேயுள்ள பகுதிகளான தாண்டிக்குளம், சாஸ்திரி கூழாங்குளம் ஆகிய இடங்களில் 3 மணித்தியாலங்களுக்கு மேல் தொடர்ச்சியாக விமானக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ரிச்சட் டி சொய்சா கொலை – தொடர்பாக விசாரணை செய்ய ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது ஆபத்தானதாகும் –ஐ.தே.க. எம்பி

அரசாங்கம் விதித்துள்ள எரிபொருள், மின்சாரம், விவசாயப் பசளையுட்பட ஏனைய பொருளாதாரத் தடைகளையும், போக்குவரத்துச் சீர்குலைப்பையும், வான், தரை, கடல் வழிகளிலான இராணுவத் தாக்குதல்களையும் நோக்குமிடத்து அரசு நடத்திவரும் யுத்தம் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானதொரு யுத்தம் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. புலிகள் இயக்கம் முன்வைத்த யுத்த நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்குமான கோரிக்கையை நிராகரித்ததின் மூலம் மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களுக்கு எதிரான பிரகடனத்தை அரசு வெளிப்படுத்தியுள்ளது – கொ.க.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் பொருளாதாரப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டால் புலிகளால் தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாது – ல.ச.ச.க.

12.02.91 வீரகேசரி

கல்லோயா குடியேற்றக் கிராமத்திலுள்ள கிணறு ஒன்றில் 5 தமிழ்விவசாயிகளின் சடலங்கள் அழுகிய நிலையில் காணப்பட்டுள்ளன.

13.02.91 வீரகேசரி

வவுனியா ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு காரணமாக கடந்த மாதத்தில் 10க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கான பாஸ்போட் தற்போது என்னிடம் இல்லை. அது அவுஸ்திரேலியாவில் இருக்கவேண்டும். அங்குதானோ எனவும் சரியாகத்தெரியவில்லை. எதனையும் நிச்சயமாக கூறமுடியாதுள்ளது –மொஸாட் வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாரணையில் பெனி ஜெயவர்த்தனா சாட்சியம்

அரசுடன் நாம் நண்பராகவே இருக்கிறோம். அரசுடன் எல்லா விடயங்களிலும் ஒத்துழைக்கிறோம். ஒத்தும் போகிறோம். ஆனால் அரசை

பொறுத்தவரையில் தோட்டப்பகுதியில் அவர்களுக்கு ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். அதையும் பெரிதாக வளர்க்கப் பார்க்கிறார்கள் – தொண்டமான்

14.02.91 வீரகேசரி

பேசாலை அகதி முகாமிலும், தலைமன்னார் மேற்கு கிராமப்புறத்திலும் அப்பாவிப் பொதுமக்கள் – கைது செய்யப்படுவதாகவும், அவர்களைப் பற்றிய விபரங்களை அறிய முடியாதிருப்பதாகவும், இதன் காரணமாக இப்பகுதியிலுள்ள மக்கள் அச்சத்துடனும், நடுக்கத்துடனும் வாழ்வதாகவும் யு.என்.சி.எச்.ஆர். தெரிவித்துள்ளது.

கோட்டைக் கல்லாறில் 28பேர் அதிரடிப்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

15.02.91 தாயகம்

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதால் மாணவர்களின் கல்வி வசதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல்கலைக்கழக மாணவர்கள் கியூவில் நிற்பாட்டப்பட்டு ஒரு போத்தல் மண்ணெண்ணெய் ஒருவருக்கு என்ற வீதத்தில் வழங்கப்பட்டது. புலிகள் இதனை வீடியோவில் படமாக்கினர்.

அரசியல் ஊர்வலங்களை இலங்கை அரசு தடைசெய்துள்ளது. அன்னையர் முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தைத் தடை செய்வதே அரசின் முக்கிய நோக்கமாகும். காணாமற்போன 50 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் குறித்து சுதந்திர ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று அன்னையர் முன்னணி போராட்டத்தில் இறங்கியுள்ளது.

16.02.91 வீரகேசரி

அரச விமானங்க்ள் பொது மக்கள் கூடும் இடங்களையும், தஞ்சமடையும் பொது இடங்களையும் குறி பார்த்தே குண்டுகளைப்போட்டு வருகின்றன. வல்வெட்டித்துறை, புதக்குடியிருப்பு, கொக்குவில், கோண்டாவில், பூநகரி ஆகிய பகுதிகளில் பாடசாலைகள், கோவில்கள், சந்தைப்பகுதிகள் ஆகிய இடங்கள் குறிபார்த்துத் தாக்கப்பட்டுள்ளன.

புலிகளுடன் பேசியதன் மூலம் நான் சமாதானமுறையில் பிரச்சினையைத் தீர்க்க முயல்கிறேன் என்பதை அகில உலகமுமே உணர்ந்தது –பிரேமதாச

அன்னையர் முன்னணி, தந்தையர் முன்னணி என்றெல்லாம் அரசுக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளுக்கு இடம் தேடப்படுகின்றன. இவை குறித்து நாம் கவனமாக இருக்கவேண்டியுள்ளது – பாதுகாப்பமைச்சர்

18.02.91 வீரகேசரி

1990 ஜூன் 11ஆம் திகதிக்குமுன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மரணமடைந்தோர் எண்ணிக்கை 2,501. காணாமற் போனோர் எண்ணிக்கை 749. ஜூன் 11 ஆம் திகதிக்குப் பின்னர் 1,591 பேர் காணாமற் போயுள்ளனர்.

கொழும்பில் 2 தினங்களில் 60 பெண்கள் உட்பட 200 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

19.02.91 வீரகேசரி

கடந்த 3 மாதங்களுக்கு மேலாக எவ்வித உணவு நிவாரணங்களும் கிடைக்காமல் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வாகரைப்பகுதி மக்கள் பட்டினி கிடக்கின்றனர்.

ஜனசவிய திட்டம் தோல்வி கண்டால் நாம் பொதுமக்கள் முன்செல்ல முடியாது. நாம் அனைவரும் வீடுகளுக்குத்தான் செல்லவேண்டும் –பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

மத்திய மாகாணத்தில் வேலையற்றோர் தொகை 21/2 லட்சம்.

மட்டக்களப்பில் இராமசாமி என்ற முதியவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம் மக்களின் பெயரைச் சொல்லி லிபியாவிலுள்ள கடாபியிடம் பெற்றுக்கொண்ட பணத்திற்கு என்ன நடந்துள்ளது என்பதைக் கேட்க விரும்புகிறேன்– வர்த்தக அமைச்சர்

20.02.91 வீரகேசரி

குழந்தைகளுக்கான பால்மா பக்கற் ஒன்றினுள் கற்பூரம் இருந்ததி–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னால் வவுனியா நகர வர்த்தகர் ஒருவர், செயலக அரச ஊழியர் ஒருவர், ரயர் கடை உரிமையாளர் ஒருவர் உட்பட மேலும் இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலையகத் தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காகப் போராடிவரும் தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களை இல்லாதொழிக்கும் திட்டமொன்றை தோட்டத் தொழிற்துறை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. இருபத்தைந்து சதவிகித அங்கத்துவமற்ற தொழிற் சங்கங்களை ஒழித்துக்கட்டுவது அதிலொரு திட்டமாகும்.

தொழிற்சங்கங்கள் தொழிலாளரது பிரச்சினைகளுக்கான 'அடிப்படைக் காரணங்களைக் கண்டறியாது அவர்களின் பிரச்சினைக்கு 'பிளாஸ்திரி' போட்டு மூடிமறைத்து வந்துள்ளன- ல.தோ.தொ.யூ.

ஆபத்தான நிலையில் நோயுற்றிருந்த தோட்டத் தொழிலாளி ஒருவரை அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதற்கு வாகனம் கொடுத்துதவ தோட்ட நிர்வாகம் முன்வராததால் அந்த நோயாளி அநியாயமாக உயிரிழந்தார் எனக் கண்டனம் தெரிவித்து அட்டன் மேல் பீல்டைச் சேர்ந்த சுமார் 400 தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை அகதிகள் முகாக்கு வந்த படையினர் - நூற்றுக் கணக்கானோரை அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் மீண்டும் வந்து எனது மகன் உட்பட 16 பேரைக்கொண்டு சென்றனர். இன்னும் எனது மகனைக் காணவில்லை. ஐயோ எனது மகனை மீட்டுத் தாங்கோ" என்று அன்னையர் முன்னணி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த தாயொருவர் கதறியழுதபோது மகாநாட்டுக்கு வந்திருந்த பலரும் அழுதனர்.

முனாமடு, மருக்காரம்பளை, பத்தினியார், மகிழங்குளம் போன்ற இடங்களில் சுமார் 15க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன

21.02.91 வீரகேசரி

இலங்கையில் முதலீடு செய்ய வரும் வெளிநாட்டவர்களுக்குரிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கெனப் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவில் தனியான பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது. 6 வாரங்களுக்குள் சகலவிதமான அனுமதிகளும் பெற்றுக்கொடுக்கப்படும் இந்த வசதி உலகின் எந்த நாட்டிலும் இல்லை. இலங்கையில் குறைந்த சம்பள அடிப்படையில் ஆட்களை வேலைக்கு அமர்த்தலாம்- பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் செயலாளர்

எதிர்க்கட்சியினர் இன்று வீதிப்போராட்டத்திற்கு தயாராகிறார்கள். அரசியல் களத்தில் விளையாட யாருக்கும் இடம் கொடோம். மாக்ஸிஸ்டுகள் அரசைக் கவிழ்க்க சந்தர்ப்பம் பார்த்தவண்ணமுள்ளார்கள் - பாதுகாப்பமைச்சர்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு லொறிகள் மூலம் உணவுப் பொருட்கள், மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு செல்ல சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் எடுத்த முயற்சிகள் கட்டுப்பட்டை தலைமையகத்தினால் தடுக்கப்பட்டுள்ளன.

22.291 வீரகேசரி

பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் எம்.பி.க்கள் பலர் சபையின் மத்தியில் ஒன்றுதிரண்டு இழுப்பறி பட்டதோடு, குத்துகளையும், அடி, உதைகளையும் தாராளமாகப் பரிமாறிக் கொண்டனர். பெண் அமைச்சர் ஒருவர் கையில் செருப்புடன் காணப்பட்டார்.

22.02.91 தாயகம்

இலங்கையின் வடகீழ்ப் பகுதியில் 2009 தமிழர்கள் காணாமற்போயுள்ளனர். இவர்களின் உறவினர்களின் கூற்றின்படி இப் பகுதிகளில் ஜீப்புகளிலும், ட்ரக்குகளிலும் திரியும் இராணுவம் அல்லது அரசு சார்பான மரணப்படைகளினால் இந்த இளைஞர்கள் அகதிமுகாம்கள், படமாளிகைகள், வைத்தியாசலைகளிலும் கூட கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அரசானது மக்கள் வாழும் இடங்களில் பெற்றோலும், றப்பரும் நிரப்பப்பட்ட பீப்பாய் குண்டுகளைப் போட்டு மக்களைக் கொல்கின்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வகைக்குண்டுகள் வெடித்து, எரிந்து தோலில் ஒட்டி பற்றியெரியும் தன்மை வாய்ந்தன.

22.02.91 வீரகேசரி

மட்டக்களப்பு சதாம் குசேன் கிராமத்திற்குச் சென்ற 2 முஸ்லீம் ஊர்க்காவற்படையினர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற மினிபஸ் ஒன்று முஸ்லீம்களால் நிறுத்தப்பட்டு பஸ் சாரதி சுட்டுக்கொல்லப்பட்டார். பஸ்ஸிலிருந்து பிரயாணிகள் கத்திகளால் வெட்டப்பட்டதில் 12 பேர் பலத்த காயமடைந்தனர். இரு பயணிகள் பஸ்ஸுடன் தீ வைத்துக் கொளுத்தப்பட்டனர்.

23.02.91 வீரகேசரி

எமக்குச்சவால் விடுபவர்கள் வீதிக்குவந்து பார்க்கட்டும்– பாராளுமன்றத்தில் பாதுகாப்பமைச்சர்

25.02.91 வீரகேசரி

அம்பாறை மாவட்டத்தில் சவளக்கடைக்கு அருகேயுள்ள 15 ஆம் கொலனிப்பகுதியில் 7 தமிழர்கள் சீருடை அணிந்தவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். 14 பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களின் நிலைமை என்னவென்பது இதுவரை தெரியவில்லை.

26.02.91 வீரகேசரி

அம்பாறை மாவட்டத்தில் 22தமிழர்கள் ஊர்க்காவற் படையினராலும் பொலிசாரினாலும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இதே தினத்தில் வயல்வெளியிலிருந்து 4 சடலங்கள் விவசாயிகளால் கண்டெடுக்கப்பட்டன.

28.02.91 வீரகேசரி

எதிரணி அரசியல் கட்சிகள் ஆரம்பித்துள்ள அன்னையர் முன்னணியைப் – போன்று கொலை செய்யப்பட்ட முப்படைகளின் குடும்ப அங்கத்தவர்கள், அரச ஊழியர்களின் குடும்பத்தினர் ஆகியோரைக்கொண்ட போட்டி அன்னையர் முன்னணி ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

33

"செய்திக் குறிப்பில் இடம்பெறும் சுருக்கங்களின் விளக்கங்கள்.
ஏதாவது தவறவிடப்பட்டிருப்பின் குறிப்பிட்டு எழுதுங்கள்.
(பக்கம் 38இன் தொடர்ச்சி)

18. த.கா – தமிழ் காங்கிரஸ்.
19. த.வி.கூ – தமிழர் விடுதலைக்கூட்டணி
20. எல்.ரி.ரி.ஈ – தமிழீழ விடுதலைப் புலிகள்
21. பி.எல்.எல்.ரி – விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி.
22. ஈ.பி.ஆர்.எல்.எவ் – ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி.
23. ஈ.பி.டி.பி – ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி
24. புளொட் – தமிழீழ மக்கள் விடுதலை கழகம்.
25. டி.பி.எல்.எவ் – ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி.
26. ரெலோ – தமிழீழ விடுதலைக்கழகம்
27. ஈரோஸ் – ஈழம் புரட்சி அமைப்பு.
28. ஈ.டி.எப் – ஈழவர் ஜனநாயக முன்னணி.
29. ஈ.என்.டி.எல்.எவ் – ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி
30. எம்.பி – பாராளுமன்ற உறுப்பினர்.
31. மா.ச – மாகாணசபை

www.tamilarangam.net

தேசத்தின் குறிப்புகள்.....
(தொடர்ச்சி)

அவர் சிரித்தபோது எனக்கு எரிச்சல் இன்னும் கூடியது. நான் கேட்டேன்"ஏன் சிரிக்கிறாய்?"

"இல்லை. உன்ரை கோபம் எனக்குச் சிரிப்புக் காட்டுது. முதலிலை நீ நான் சொல்லுறதை விளங்கிக்கொள்ளப் பழக வேணும். பிறகு கதைக்கவேணும். நீ என்னடாவெண்டால் உன்ரை மனவிருப்பப்படி எல்லாம் இருக்க வேணுமெண்டு நினைச்சுகொண்டு ஆத்திரப்படுறாய்"

"ஏன் எண்டு எனக்கு விளங்கேலை"

"நான் சொன்னது புலியளின்ரை போராட்டத்திற்கு ஒரு தேசியத் தன்மை இருக்குதெண்டு மட்டுந்தான்; தமிழ் மக்களின்ரை தேசிய நலன்கள் இந்த யுத்தத்தோடை பிணைக்கப்பட்டிருக்குது எண்டுதான். நீ திரும்பத் திரும்ப புலிக்கு ஏதோ நான் வக்காலத்து வாங்கிறதாய் நினைச்சுக்கொண்டு கதைக்கிறாய். அவங்கடை கோரிக்கைகளிலை தேசிய நலன்கள் பிரதிபலிக்கின்றன. யுத்தத்திலையும் அப்பிடித்தான். ஆனால் நான் திரும்பவும் சொல்லுறன் இது தேசிய விடுதலை யுத்தமல்ல. இவர்களால் 'தேசிய விடுதலையை'ச் சாதிக்கமுடியாது. மக்களை நம்பாததுதான் அதுக்கு முக்கிய காரணம்"

"அவங்கள் ஏன் மக்களை நம்பேலை? மக்களை நம்பிறவை பெரிசாக் கிழிச்சுப் போட்டினமே?"

"தம்பி, பிரச்சினையளை உன்ரை மன உணர்விலை இருந்து பாக்காதை. முதலிலை அதை நிப்பாட்டு. நிலைமையளை ஆராய்ஞ்சு முடிவு காணப் பழகு. மனிதாபிமான அடிப்படையிலை பாத்து புலியளை விமர்சிக்க வெளிக்கிட்டால் மனித உரிமைகள் சங்கத்திலை சேர்ந்து உரிமை பறிக்கப்பட ஆக்களின்ரை பேர்ப் பட்டியலைத் தயாரிச்சு பேப்பரையும், மையையும், நேரத்தையும் வீணாக்கலாம் நீ. ஆனால் ஒரு மயிரளவு கூட மாற்றம் நடக்காது"

"சரி அப்ப என்ன செய்யச் சொல்லுறாய்?"

"தமிழ் மக்களின்ரை விடுதலைப் போராட்டம் வெற்றி பெற வேணுமெண்டால், அதாவது எங்கடை தேசிய விடுதலை சாதிக்கப்பட வேணுமெண்டால் முதலிலை அதுக்குரிய பாதையை நாம் கண்டுகொள்ள வேணும். கடந்தகாலத்திலையும், மற்ற இயக்கங்களையும் பிழை பிடிக்கிறதன் மூலம் பழியை அதிலை போடுறதை விட்டிட்டு எது சரியான பாதையெண்டு ஆராய முயல வேணும். புலியளின்ரை நடவடிக்கையைவிட அவங்களுடைய சிந்தனையை விமர்சிக்கிறதுதான் முக்கியமானது. போராட்டத்தின்ரை தவறான சிந்தனைப் போக்கை விமர்சித்து சரியானதை வளர்த்தெடுக்கிறதுதான் தேவையானது. (தொடர்ச்சி அடுத்த பக்கம்)



# கனவை மிதித்தவன்

• பார்த்திபன்

ஒரு சனிக்கிழமை உருத்திரனை தன்னுடைய அறைக்கு அழைத்திருந்தான் முத்து. ஞானமும் பாலகுமாரும் வேறு நகரம் போயிருந்தார்கள்.

ரீ குடித்து முடித்து, சமைக்க ஆரம்பித்தபோது உருத்திரன் கேட்டான் "அப்ப றூமில இருக்கேக்கை என்ன செய்யிறனியள்?"

"என்ன செய்யிறது? அதுதான் பிரச்சினையே. தமிழ்படம் இல்லாட்டி ரி.வி.யில ஓடுற படம். சும்மாயிருந்து வாயடிக்கிறது. சிலவேளை காட்ஸ். பியர் வேற என்னத்தைச் செய்யிறது" சொல்லிக்கொண்டே முத்து கீரையை சுடுதண்ணியில் பிடித்து இளக்கினான்.

"பேப்பர் பாக்கிறேலயோ?"

"டொச் விளங்கினாவெல்லோ!"

"நான் தமிழ்ப் பேப்பறுகளைக் கேட்டனான்"

முத்து சிரித்தான். "இஞ்ச ஆர் சிலோன் பேப்பர் எடுக்கிறான். வாசிக்கிறதே அருமை. அப்பிடி வாசிக்கிறதெண்டாலும் ஒண்டில் குமுதம், பாக்கியா. அல்லாட்டி பொம்மை, திரைச்சித்திராதான்"

"அப்ப சிலோன் நியூஸ் அறியிறது எப்பிடி?"

"தற்சேலா இலங்கைப் படத்தோட ரி.வி.யிலை போட்டால் சரி. இல்லாட்டி சிலோ

www.tamilarangam.net

ன் கடிதங்கள்தான். கீழ் றூ மில முந்திக் கப்பலிலை வேலைசெய்த ஒராள் இருக்கிறார். அவர் சிலவேளை பி.பி.சி. கேட்டுச் சொல்லுவார். சிலவேளை இயக்க இன்பமேசனுக்கு அடிச்சுப் பாப்பம்"

"இயக்க இன்போமேசனிலயிருந்து எப்பிடி உண்மையைக் கண்டுபிடிப்பீங்க?"

"அதுக்கென்டொரு ஸ்பெசல் சமன்பாடே வைச்சிருக்கிறம். புலி, புளொட், ஈரோஸ் மூண்டுக்கும் அடிச்சுப் பாப்போம். பிறகு எங்கடை சமன்பாட்டிலை போட்டு ஒரளவுக்கு உண்மையானதைக் கண்டுபிடிச்சிடுவம்" இருவரும் சிரித்துக்கொண்டார்கள்.

சோற்றுக்கு தண்ணீர் வைத்தாயிற்று. கீரை இளகிக் கொண்டிருந்தது. சுடுதண்ணிக்குள் போடப்பட்ட இறைச்சி வெளிறியிருந்ததே தவிர தளரவில்லை. பொறுமையிழந்த முத்து அதை எடுத்துக் கஷ்டப்பட ஆரம்பித்தான். கத்தி சறுக்கிக்கொண்டேயிருந்தது. உருத்திரன் கழுவாமல் கிடந்த பாத்திரங்களைக் கழுவினான்.

"இங்க வாற தமிழ் மகசீனுகளும் வாசிக்கிறேலயே?"

"ஆக முந்தி ரண்டொண்டு எடுத்தனாங்கள். பிறகு எல்லாத்தையும் விட்டிட்டம். இன்றஸ்ற் இல்லாமப் போச்சு"

"இப்ப பதினைஞ்சுக்குமேல வருகுது"

"ஆ"

வெளியே வெயில் பரவியது. போனவாரம் குளிர்ந்தது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். ஸ்னோவுக்குள்ளும், சகதிக்குள்ளும் காணாமற் போயிருந்த பச்சைப் புற்கள் இப்போதுதான் முளைத்தவைபோல் பிறெஷ்ஷாக நிமிர்ந்திருந்தன. சிறுவர்கள் ஏதோ விளையாடினார்கள்.

சோற்றை இறக்கி, கறிகளை அடுப்பில் வைத்து விட்டு, றூமுக்குள் வந்தார்கள். ஜன்னல் திரையை விலக்கி, திறந்துவிட்டபோது வெளிக்காற்று தயங்கி உட்பிரவேசித்தது. முத்து படுக்கைகளை மடித்தான். "எல்லாத்தையும் அப்பிடியே விட்டிட்டுப்போட்டாங்கள்"

"டெக்குக்கு மேலை இருக்கிறது என்ன கசற்?"

"புதுப் பாட்டுக்கசற் . பொறும் போட்டுவிடுறன்"

"வேண்டாம். இருக்கட்டும்" என்று உருத்திரன் சொன்னதை அவன் பிகு செய்வதாக எடுத்துக்கொண்டு கசற்றைப் போட்டு ரி.வி.யை உயிர்ப்பித்தான் முத்து.

தொம்ஸன் விளம்பரம் எல்லாம் முடிந்து, நட்டநடு வெயிலில் (நாற்பது பாகையாக இருக்கலாம்!) லெதர் ஜக்கெற், லெதர் சப்பாத்து, தொப்பி போட்டிருந்த ரஜனியும், கௌதமியும் எங்கிருந்தோ ஓடி வந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓடிப் பிடித்தார்கள். ஆளை ஆள் தூக்கினார்கள். மறைவாக முத்தமிட்டார்கள். அவர்கள்போக மற்றப்பபாட்டுக்கு அதே வெயில் நேரம் ஜக்கற், சப்பாத்து, தொப்பி போட்டிருந்த கமலும் அமலாவும் ஓடிப் பிடித்து அதே காரியம் செய்தார்கள். இப்படியே ஒவ்வொருவராக லைனில் வந்துகொண்டிருந்தார்கள்.

ஏன் கேட்டேன் என்றாகி விட்டது உருத்திரனுக்கு. முத்து குசினிக்குப் போய் கறி ருசி பார்த்து, இறக்கி வைத்து, அடுப்புகளை நிறுத்திவிட்டு வந்தான்.

"கசற்றை நிற்பாட்டி விடும். தலையிடிக்குது"

முத்து உருத்திரனைப் புதினமாகப் பார்த்தான். டெக்கை நிறுத்தி, கசற்றை எஜெக்ற் பண்ணினான்..

"பசியெண்டால் சொல்லும் சாப்பிடுவம்"

"கொஞ்சம் பொறுத்து சாப்பிடுவம்"

"நீர் எவடம்?" போன்ற விபரங்கள் எல்லாம் உருத்திரன் வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே கேட்டு முடித்தாயிற்று. இலங்கையில் தெரிந்திருக்கவில்லை.

"இப்பிடியே இருக்க பெரிய விசராயிருக்குமே?"

"என்ன செய்யிறது? வேணுமெண்டே இப்பிடி இருக்கிறம். எங்களைப் போலத்தானே மிச்ச சொச்சத்து ஆக்களும்" சிரித்தான் முத்து.

உருத்திரன் ஒரு கணக்குப் போட்டுக்கொண்டான். இவனுடன் ஆரம்பிக்கலாம். முழு ஏமாற்றம் தராது.

"ஏதாவது பிரயோசனமாய் செய்யலாமெண்டு யோசிக்கேலையே?"

"இப்பதான் பொயின்றுக்கு வாறியள். உமக்கும் உதுதான் பிரச்சினைபோலை." தன்னைப் போலவே இன்னொரு நபரைக் கண்டதில் முத்துவுக்குச் சிறிது பூரிப்பு. ஒத்த முனைகள் ஒன்றை ஒன்று தள்ளும்விதி காந்தத்துக்கு மட்டும் போலும்.

"நாங்கள் எப்படியும் நாட்டுக்குத் திரும்பிப் போகப் போற ஆக்கள்..."

"பெலத்து கதைச்சு அடி வேண்டப்போறியள். அவனவன் இமிக்கிறன்ற், வொய்க்கினிஸ், ஸ்ரிக்கர் விசா எண்டு ஓடித்திரியுறாங்கள். நாட்டுக்குத் திருப்பிப் போறதைப் பற்றிக் கதைக்கிறது அவங்களுக்குக் கேட்டுதோ"

"நல்ல ஒரு விசாவை ஆக்கள் தேடுறது பிழையில்லைத் தானே. வேலை செய்யிறதுக்குக் கூடி தேவைதானே"

"அது சரிதான். உமக்குச் சொன்னா என்ன தமிழீழத்துக்கான பங்களிப்பெண்டு இயக்கத்துக்குக் காசு சேக்கிற சில பேரே இஞ்ச செற்றிலாகத்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன் பாக்கினம்" என்று குரலைத் தாழ்த்திக் கதைத்தான் முத்து.

உருத்திரன் கதைப்பதற்கு முன் கதவைத் திறந்து கொண்டு பாலகுமாரும், ஞானமும் வந்தார்கள்.

"ஹலோ"

"ஹலோ"

"உருத்திரன். என்ரை புது குலேக்கன்" முத்து அறிமுகப்படுத்தினான். "இவன் ஞானம். இவன் கனடாப் புகழ் பாலகுமார்"

"சமைச்சியாடாப்பா. பேய்ப் பசி"

"எல்லாம் அவிச்சு வைச்சிருக்கு. விழுங்குவம்"

தட்டைக் கழுவி, போட்டு, நால்வரும் ஒன்றாகச் சாப்பிட்டார்கள். பழக்க தோசத்தில் ரி.வி. யைப்போட அதுபாட்டுக்கு ஏதோ கதைத்தது.

"இப்பிடிச் சேந்து சாப்பிடுறதும் ஒரு சந்தோசம்தான்" என்றான் உருத்திரன்.

"அதுகும் ஒராள் சமைச்சு மிச்சாக்கள் சும்மா சாப்பிடுறதெண்டால்..." பாலகுமார் சொல்ல, "இரவு நீதான் சாப்பாடு" என்றான் முத்து.

"என்ன இருந்தாலும் இப்பிடியொரு சந்தோசம் வராதுதான்" – இது ஞானம்.

சாப்பிட்டு, யூஸ் குடித்து மறுபடி அறையில் கூடினார்கள்.

"கசற்றேதேன் போடுவமே?" பாலகுமார் அடுக்கியிருந்த கசற்றுகளைத் துளாவ, "சீசீ வேண்டாம். சும்மாயிருந்து கதைப்பம்" என்றான் அவசரமாக உருத்திரன்.

"பாட்டாவது கேப்பம்" பதிலை எதிர்பாராமல் கசற் ஒன்றை எடுத்து றெக்கோடருக்குள் தள்ளினான் பாலகுமார். ஜேசுதாஸின் சோக கீதங்கள்.

"இதுகும் ஒரு சைக் – கோதான்" என்றான் உருத்திரன் சட்டென்று.

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்?"

"சோகத்துக்குள்ளை எங்களை அமுக்கி, அதை ரசிக்கிற பக்குவம் இஞ்ச வளர்ந்து வருகுது" என்று உருத்திரன் சொல்ல, பாலகுமாரும், ஞானமும் முத்துவை ஒருமாதிரிப் பார்த்தார்கள் – ஹூம் தெரியாமல் ஆளைக் கூட்டி வந்துவிட்டான் என்று.

உருத்திரன் அவர்களை நோட்டமிட்டான். இந்தப் போக்கில் சரிவராது. நான்தான் அந்நியமாயிடுவன். நிதானமாகத்–தான் போகவேண்டும். "நீங்கள் எங்க வேலை செய்யிறீங்க?" பாலகுமாரையும், ஞானத்தையும் கேட்டான்.

"மக்டொனால்ட்ஸ்தான்"

"சம்பளம் எப்பிடிப் பறவாயில்லையே?"

"என்னத்தைப் பறவாயி

www.tamilarangam.net

ல்லை. ஒம்பது மாக்தான். இப்ப தான் பத்துப் பெனிக் கூட்டியி ருக்கிறான்." ஞானம் சலித்தான்.

"வேலை எப்பிடி கஸ்டமோ?"

"கஷ்டமோவோ? மரணச். சனம் எந்த நேரமும் அள்ளுப்பட்டபடி. இப்பவே இப்பிடி யெண்டால் இனிச் சமருக்கு செத்தோம்"

"இப்ப அவங்கள் திறமான ஐடியா எல்லாம் கண்டுபிடிச்சு வைச்சிருக்கிறாங்கள்" என்றான் பாலகுமார்

"என்ன?"

"நாங்க வேலை செய்யிற மக்டொனால்ட்ஸ்ஸில எங்களோடை சேத்து பதினொரு தமிழர். செவ் என்ன செய்தான் எண்டால் தமிழன் ஒருதனையே சுப்பவைசர் மாதிரிப் போட்டு முன்னுக்கு வேலைசெய்ய விட்டான். பிறகு சொல்ல வேணு-மே! செவ் சொல்லாத வேலையெல்லாத்தையும் அவன் எங்களிட்டை வேண்டிப்போடுவான். அவனை சுப்பவைசராக்கின பிறகுதான் றெஸ்ரோறண்ட் இன்னும் கொஞ்சம் எழும்பியிருக்கெண்டு சொல்லலாம்"

"அவனுக்கு ஒழுங்காய் -டொச்சும் தெரியாது. ஆனா செவ் நிண்டால் தடக்குப்பட்டெண்டாலும் டொச்சிலதான் கதைப்பான் நல்ல பிள்ளை பேர் எடுக்கிறதுக்கு. போன மாசம் ஒருதன் அடுப்பை நிப்பாட்ட மறந்து போனான். இவன் தமிழில அதைச் சொல்லியிருக்கலாம். செவ் நிக்கிறான் எண்டு தெரிஞ்சுகொண்டே ஏன் அடுப்பை நிப்பாட்டேலை எண்டு டொச்சில கேட்டிருக்கிறான். பிறகென்ன! அடுப்பு நிப்பாட்டாதவனை வேலையிலயிருந்து நிப்பாட்டியாச்சு என்றான் ஞானம். இருவரும் வெறுப்பாக இருந்தார்கள்.

"அம்மாவாணை வேசமோனுக்கு ஒருநாளைக்கு இழுத்துப் போட்டுச் சாத்துறன் எண்டுதானிருக்கிறன்" சொல்லும்போதே பாலகுமார் செய்வான் -போலத்தானிருந்தது.

"இந்தக் கோபத்திலை ஒரு ஆபத்திருக்கு. எங்கடை உண்மையான எதிரி செவ்தான் எண்டது மறைஞ்சுபோய் இடையில நிக்கிறவன்தான் எதிரி எண்டு வந்திடும்" என்றான் உருத்திரன்.

"எங்கடை பக்றியிலயும் உந்த விளையாட்டு இருக்குத்தானே?" என்றான் முத்து.

"ஆர் சுந்தரலிங்கத்தைச் சொல்லுறீரே?" உருத்திரன்.

"ஓமோம். அவர் தான். பந்தம் பிடிக்கிறதுக்கு அவனைக் கேட்டுத்தான். வேலை தொடங்குறதுக்கு அரை மணித்தியாலம், முக்கா மணித்தியாலம் முதல் வந்து வேலையத் தொடங்கியிடுவான். பின்னேரமும் நிண்டு செய்வான். சனிக்கிழமையும் வரட்டுக்குமோவெண்டு அண்டைக்கு கேட்டவனாம்."

(தொடர்ச்சி 48 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டிலின் போக்கல்ல — தமிழீழத்தின் போக்கே

தூண்டிலின் போக்குப் பற்றிக் கலம் 34இல் வெளிவந்த விமர்சனம் என்பது 'தூண்டிலின் போக்கு' என்பதைவிட தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய போக்குகள் நிலைப்பாடுகள் பற்றிய விமர்சனம் என்பதே எனது கருத்தாகும். தூண்டிலின் போக்கும் இதிலடங்குகிறது. எப்படி நோக்கினும் இவ் விவாதம், கருத்துப் பரிமாறல்கள் வரவேற்கப் படவேண்டியதொன்றே. இவற்றின் ஊடே தூண்டில் ஒரு நிலைப்பாட்டிற்கு வரமுடியுமென நினைக்கின்றேன்.

கலம் 34இல் வெளிவந்த தூண்டிலின் போக்குப் பற்றி சகஓடிகளால் வைக்கப்பட்ட விமர்சனம் நல்ல நோக்குடனும் சில எதிர்பார்ப்புகளுடனும் வைக்கப்பட்டுள்ளது. இக் கருத்துகள் ஏற்கக்கூடியனவாயிருக்கின்றன.

கலம் 35இல் வெளிவந்த சிவசேகரத்தின் கட்டுரையிலும் "சகஓடிகளின் விமர்சனத்தில் நல்ல நோக்கமிருப்பினும் கூடிய எதிர்பார்ப்பால் சில தவறுகள் ஏற்பட்டுள்ளன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அத் தவறுகள் என்னவென விபரமாகக் குறிப்பிடவில்லை. இவற்றைப்பற்றி எனது கருத்துகளை முன் வைக்கின்றேன்.

தமிழீழப் போராட்டத்தின் இன்றைய போக்கில் நான் குவிதமான கருத்துகளும், அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலைப்பாடுகளும் உள்ளன.

1. விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டு இலங்கை இந்திய அரசுகளின் ஏஜென்டுகளாக மாறி, மக்கள் விரோத ஜனநாயக மறுப்பு, பாஸிஸத் தன்மை (புலிகளின் பாஸிஸத்தன்மைக்கு எந்தவிதத்திலும் குறையாத) போன்றவற்றால் முற்றிலும் சீரழிந்து, துரோக நிலையெடுத்து போராட்டத்தின் எதிரியாக மாறியுள்ள போக்கு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப் போக்கின் பிரதிநிதிகளாக ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.டி.பி, சந்தர்ப்ப வாத நிலைப்பாட்டுடன் கூடிய ஈரோஸ் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. மேற்படி இயக்கங்களிலும் வேறு சில குழுக்களிலும், புலியிலும் இருந்து வெளியேறிய அல்லது விட்டோடிய .. ஆள் கடத்தல், கள்ளக் கடத்தல் என்று சீரழிந்த நிலைக்குத் தள்ளப் பட்டவர்கள். இவர்கள் குறிப்பிடத்தக்கதொரு போக்கின் பிரதிநிதிகள் எனக்கொள்ள முடியாவிட்டாலும் பல்வேறு கருத்துகளைக் கொண்டிருக்கின்றனர். தமிழீழம் சரி வராது; ஐக்கியப் புரட்சிதான் சாத்தியம்; புலிதான் சரியானது; ஈ.பி.ஆர். எல்.எவ்தான் சரியானது; இந்தியாதான் உதவி செய்யவேண்டும் போன்ற பல்வேறு கருத்துகளை இவர்கள் கொண்டிருக்கின்றனர். இவர்கள் பல்வேறு நாடுகளிலுமுள்ள தமிழ் சமுதாயத்திலும் பரவியிருக்கிறார்கள்.

3. மக்கள் விரோத, ஜனநாயக மறுப்பு, பாஸிஸ தன்மை என்பவற்றை உள்ளடக்கிய உறுதியான கொள்கைகளில்லாமல் ஊசலாடும் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையுடைய, இலங்கை அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிக்கொண்டே தானும் ஒடுக்குமுறையைக் கைக்கொள்ளுகின்ற முரண்பட்ட குணாம்சங்களையுடைய போக்கு. இதன் பிரதிநிதிகளாக இன்றுவரை போராட்டத்தில் ஊன்றி நிற்கும் புலிகளாகும்.

4. ஒரு சரியான பாட்டாளி வர்க்கக் கட்சியைக்கட்டி சமூக விடுதலையுடன் கூடிய தேசிய இன விடுதலையை முன்னெடுக்க வேண்டுமென்ற நிலையிலுள்ள போக்கு. இப் போக்கிலும் பல்வேறு கருத்துகளிருந்தாலும் மக்களை நேசிக்கின்ற, ஜனநாயகத்தை மதிக்கின்ற ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. இதன் பிரதிநிதிகளாகப் பல்வேறு சிறு குழுக்களும், இயக்கங்களின் அராஜகத்தன்மைகளால் வெளியேறி பல்வேறு நாடுகளில் வாழ்ந்துகொண்டு சில முற்போக்குச் சஞ்சிகைகளினூடாக தமது கருத்துகளைப் பரிமாறிக்கொண்டிருப்பவர்களும் அடங்குவர்.

இதில் முதலாவது போக்கை எடுத்துக்கொண்டால், இதில் இன்னமும் ஆராயவேண்டும் என்ற அவசியமிருப்பதாகத் தெரியவில்லை. இத் துரோக இயக்கங்கள் இத் துரோக நிலைப்பாட்டைத் தமது அடித்தளமாக கொண்டிருந்தார்களா அல்லது புலியின் தாக்குதலுக்கு முகங்கொடுக்கமாட்டாமல் கூலிப் படையாகச் சீரழிந்தார்களா ? என்ற விவாதத்திற்கே இடமில்லை. இவ்வியக்கங்களின் தலைமைகள் தமது சொந்த மக்களின் பலத்தில் நம்பிக்கையில்லாமல் விரிவாதிக்க நோக்கம் கொண்ட இந்தியாவின் அடிவருடி

www.tamilarangam.net

களாகவும், தலையாட்டிப் பொம்மைகளாகவும், இந்திய உளவுப் படையான 'றோ'வின் செல்லபிள்ளைகளாகவும் மாறிய போதே இந்நிலைப்பாட்டிற்கு வந்துவிட்டார்கள். புலியின் தாக்குதலும் இவர்களின் போக்கை துரிதப்படுத்தியது என வேண்டுமாயின் குறிப்பிடலாமே தவிர புலிகளே இவர்களின் நிலைப்பாட்டுக்குக் காரணமெனக் குறிப்பிடுதல் பொருத்தமற்றது.

இவ்வமைப்புகளின் கீழ்மட்ட உறுப்பினர்கள் வேறு வழியில்லாமல் உயிர்ப் பாதுகாப்பிற்காக இவ்வமைப்புகளில் இருக்கிறார்களென்ற விடயமும் இங்கு குறிப்பிடவேண்டியதாகும். இவர்களை வென்றெடுத்துப் போராட்டத்துடன் இணைக்கக்கூடிய சரியானதொரு அமைப்பு காணப்படுமேயாயின் இவர்களை (கீழ்மட்ட உறுப்பினர்களைச்) சரியான வழிக்குத் திருப்பியிருக்கமுடியும்.

பாரிய தவறுகளை இழைத்தது மாத்திரமல்ல, விடுதலைப் போராட்டத்திற்கும் துரோகமிழைத்து இலங்கை, இந்திய அரசுகளின் கூலிப்படைகளாக மாறியுள்ள இவ்வியக்கங்கள் இனி எக்காலத்திலும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதில்லை. இவர்களுடைய நிலைப்பாடு இலங்கை என்ற ஒற்றையாட்சியில் மாகாணசபை போன்ற சலுகைகளைப் பெற்று பதவிச் சுகத்தில் திளைப்பதுதான். ஆகவே இவர்கள் விடுதலைப்போராட்டத்தின் எதிரிகள் என்றே கூறிவிடலாம்.

அடுத்து இரண்டாவதுபோக்கைப் பிரதிநிதித்துவப் படுத்துவோர் ஒருபோதும் அமைப்பு வடிவத்தை எடுக்கமாட்டார்கள் போராட்டத்திற்கு வெளியிலிருந்துகொண்டு ஆதரவு, எதிர்ப்பு என்ற வகையிலான நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் இவர்களுடைய சமூகக் கலாச்சாரச் சீரழிவுகள் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தெளிவு.

அடுத்து, மூன்றாவது போக்கை எடுத்துக்கொண்டால் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புலிகளை மதிப்பிடுவதில் தான் பல்வேறு சக்திகளும் குழப்பமடைகின்றன. இவ்வியக்கம் ஒரு சமூக விடுதலையை வேண்டி நிற்கும் பாட்டாளிவர்க்கக் கட்சியோ, மாற்றுக் கருத்துகளை மதித்து ஜனனாயகத்தை மக்களுக்கு வழங்கக்கூடிய தேசியவிடுதலை இயக்கமோ அல்ல. கொடிய இனவொடுக்குமுறைக்கு எதிராகப் போராடிக் கொண்டே தன்னின மக்கள் மீது கொடிய ஒடுக்குமுறையைக் கைக் கொள்ளும் தேசியம், பாஸிஸம் ஆகிய முரண்பட்ட குணாம்சங்களையும், உறுதியற்ற, ஊசலாடும் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையும் , எதேச்சதிகாரப் போக்குகளையும் கொண்ட விட்டுக் கொடுக்காத, ஆயுதப் போராட்டத்தில் அனுபவம் மிக்க இயக்கமாகும்.

www.tamilarangam.net

இதன் பாஸிஸத் தன்மை ஆரம்பத்திலிருந்தே இவ் வியக்கத்தில் இருந்துள்ளது. இவ் வியக்கத்தின் ஆரம்பம் தமிழர் விடுதலைக் கூட்டணியால் துரோகிகளெனக் காட்டப்பட்டவர்களைக் கொன்றொழிப்பதன் மூலம் விடுதலையைப் பெறமுடியுமென்ற தத்துவார்த்தப் பின்னணியைக்கொண்டிருந்தது. (இது அன்றைய 1971-1975 கால கட்டங்களில் பெரும்பாலான தமிழ் இளைஞர்களிடம் குடிகொண்டிருந்த தத்துவம்.) இதற்கு மேற்பட்ட அரசியற் கொள்கையொன்று புலிகளுக்கு இருந்ததில்லை. கூட்டணியும் இதைத்தான் விரும்பி ஊக்குவித்தும், வளர்த்தும் வந்தது.

1975இல் யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவின் கொலையைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் முதற் கொள்கைப் பிரகடனத்தில் இவ் வியக்கத்திலிருந்து விலகுவோர் வேறோர் இயக்கத்தில் சேரவோ அல்லது புதிதாக இயக்கமொன்றை ஆரம்பிக்கவோ முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை மீறுவோருக்கு உயர்ந்தபட்ச தண்டனையாக 'மரணதண்டனை' வழங்கப்படும்' என்ற விதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதிலிருந்த அர்த்தத்தைப் புரிந்தோ புரியாமலோ அவ்வியக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் இதை ஏற்றுக்கொண்டிருந்தனர். இவ் விதியானது இவ்வியக்கத்திலிருந்து விலகி வேறோர் இயக்கம் அமைக்க முயன்ற ஆரம்ப கால உறுப்பினரான பற்குணம் என்பவரை 1977இல் பலியெடுத்துக் கொண்டது.

எனவே ஆரம்பத்திலிருந்தே மாற்றுக் கருத்தை இயக்கத்தின் உள்ளேயோ, வெளியேயோ சகித்துக்கொள்ளப் புலி தயாராக இருக்கவில்லை. இது வளர்ச்சியடைந்து மாற்று இயக்க உறுப்பினர்களையும் ஆயுத முனையில் சந்தித்துப் பலிகொண்டது. மாற்றுக் கருத்துகளை மதித்து அவற்றிலுள்ள தவறான அம்சங்களை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக ஆயுதம் மூலம் தீர்ப்பதிலேயே முன்னிற்கிறது புலி இயக்கம்.

விடுதலைப் போராட்டத்தின் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?என இனங் கண்டு நட்புச் சக்திகளை ஐக்கியப்படுத்துவதற்குப் பதிலாக பகையாகக் கருதி, எதிரிகளைக் கூட்டி, தனிமைப்பட்டுப் போயுள்ளது இப்புலி இயக்கம். இதனுடைய இப் போக்கினால் இலங்கை, இந்திய அரசுகளுக்கு எதிரான சிறுகுழுக்களின் ஆதரவையும் இழந்துள்ளது. அத்துடன் மீள முடியாத பெரும் தவறுகளை மேலும் மேலும் இழைத்து வருகிறது. ஆனால் இலங்கையரசின் இனவொடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் இன்னமும் நிலைகொண்டிருப்பதால் இப் போராட்டக் குணாம்சத்தைக் கைவிடாதவரை இவ்வியக்கத்தை முற்றாக ஒதுக்கிவிடமுடியாது.

நான்காவது போக்கைப்

www.tamilarangam.net

பிரதிநிதித்துவப்படுத்துவோர் பற்றி நோக்குவோமாயின் இவர்கள் பல்வேறு இயக்கங்களின் அராஜகங்களினால் வெறுப்புற்று தனித்தனி நபர்களாகவும், சிறு சிறு குழுக்களாகவும் வெளியேறியவர்களும், வேறு சிறிய குழுக்களிலிருந்து சிதறியவர்களும் ஆவார். இவர்கள் மக்களையும், விடுதலையையும் நேசிக்கின்றவர்கள் ஆவர். இவர்கள் இலங்கை, இந்திய அரசுகள், அவற்றின் ஏஜென்டுகளான கூலிப்படைகள், புலிகள் ஆகியவற்றின் ஒடுக்குமுறைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாய் உள்ளனர். குறிப்பாகப் புலிகளின் எதேச்சதிகாரப் பாஸிஸத் தன்மையால் இவர்கள் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பலர் தவிர்க்கமுடியாமல் நாட்டைவிட்டும் வெளியேறி சரியானதொரு அமைப்பிற்காகவும், விடுதலைக்காகவும் பாடுபடவேண்டும் என்ற நிலைப்பாட்டிலுள்ளவர்கள் ஆவர். வெளிநாடுகளிலிருந்து வெளியாகும் சில முற்போக்கான தமிழ்ச் சஞ்சிகைகளுக்கு இவர்களுடைய பங்குண்டு.

இவர்களிடையே பல கருத்து வேறுபாடுகளிருந்தபோதிலும் ஓர் சமூக மாற்றத்தையும், இன விடுதலையையும் வேண்டிநிற்கும் பொதுப்பண்பைக் கொண்டுள்ளனர். ஆனால் இவர்களிடையே புலிகளை மதிப்பிடுவதில் பல்வேறு கருத்துகள் காணப்படுகின்றன.

பொதுவாகப் புலிகளிடம் பாஸிஸம், ஜனனாயக மறுப்பு, எதேச்சதிகாரம் என்பவை காணப்படுவதை இவர்கள் ஏற்றுக் கொண்டாலும், இவர்களில் சிலர் இன்றைய நிலையில் புலிகளை இலங்கை, இந்திய அரசுகளுக்குச் சமமான எதிரியாக வைத்துக் கருதக்கூடாதென்றும், புலிகளைத் தாக்குவது எதிரிகளை (இலங்கை அரசாங்கத்தை) பலப்படுத்தும் என்ற நிலைப்பாட்டிலும், இன்னும் சிலர் புலி, இலங்கை, இந்திய அரசு எல்லாமே ஒரே மாதிரியான எதிரிகள்தான்; சரியானதொரு அமைப்பைக் கட்டுவதற்கும் புலிகளே முதல் இடையூறு; எனவே புலிகளைத் தாக்கி அழிப்பதே முதற்கடமையென்ற நிலைப்பாட்டிலும் உள்ளனர்.

இதில் புரிந்துகொள்ளப்படவேண்டியது யாதெனில், புலிகள் இயக்கம் பல்வேறு ஊசலாட்டங்கள், சந்தர்ப்பவாதக் குளறுபடிகளைக் கொண்டிருந்தாலும், ஒரு பெரும் தேசிய இன அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக இன்றுவரை போராட்டத்தைக் கைவிட்டுச் சமரசமாகப் போய் விடவில்லை என்பதாகும். இவர்களும் மற்றைய துரோக இயக்கங்களைப்போல இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்று மாகாணசபை போன்ற சலுகைகளுடன் சமரசமாகப் போயிருந்தால் துரோகிகளாகவோ, எதிரிகளாகவோ சுலபமாக இனங்காணப்பட்டிருப்பர்.

www.tamilarangam.net

ஆனால் இந்நிலை இது வரை ஏற்படவில்லை. அதேநேரம் எதிர்காலத்தில் இவர்களின் போக்குப் பற்றித் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. எனவே புலிகளோடு சேர்வதோ புலிகளைப் பலப்படுத்துவதோ செய்யவேண்டிய வேலை அல்ல. மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப அணிசேர்க்கைகளைக் கவனத்தில் எடுத்துச் சரியானதொரு நிலைப்பாட்டிற்கு வந்து இலங்கை அரசுக்கு எதிராகப் போராடிகொண்டே புலியின் பாஸிஸப் போக்கிற்கு எதிராகப் போராடுவதே செய்ய வேண்டுவதாகும்.

அதாவது புலிகளின் இலங்கையரசுக்கெதிரான போராட்டத்தில் அதனுடன் ஐக்கியமும், அதன் பாஸிஸப் போக்குக்கெதிராக போராட்டமும் மேற்கெள்ளப்பட வேண்டுமென்ற ரீதியிலேயே ஐக்கியமும், போராட்டமும் அமையவேண்டும்.

இதில் கவனிக்கப்படவேண்டியது யாதெனில் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு ஆட்பட்டு பழிவாங்கும் போக்கில் பொது எதிரியை (இலங்கை அரசை) மறந்து புலிகளை எதிர்ப்பது எமது முதற்பணியாகிவிடக் கூடாது. இவ்வாறு கருதினால் தமிழ் மக்களிடமிருந்து நாம் அந்நியப்படவேண்டியிருக்கும்.

முதற்பணி இலங்கை அரசுக்கெதிரான போராட்டமாகும். அதனூடே புலிகளின் பாஸிஸத்துக்கெதிரான போராட்டமும் அமையவேண்டும். இவைதான் இன்று உண்மையான விடுதலை விரும்பிகள் மேற்கொள்ளவேண்டிய பணியாகும். ஆனால் இப் பணி வெற்றியடைய நீண்டகாலம் எடுக்கும் பல இழப்புகளை எதிர்கொள்ள வேண்டியும் ஏற்படும் என்றால் தவறாகாது.

•

துணையோடி
(எ.ழும்)

---

நேசநதின் குறிப்புகள் (தொடர்ச்சி)

புலிகள் இயக்கம் அழிக்கப்பட வேணுமெண்டோ அழியவேணுமெண்டோ கருதுபவர்கள் அந்த இயக்கத்தை இயக்கும் போக்கை விமர்சிப்பதில்லை. அதாலை அவையள் திரும்பவும் அதே பிழையைத்தான் விடப் போயினம். இதிலை எந்த சந்தேகமும் இல்லை"

இதற்குப் பிறகு எங்களுக்குள் ஒரு நீண்ட சூடான விவாதம் நடந்தது. நான் போனமுறை சொன்னதன் தொடர்ச்சியையும் இதையும் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்னவென்று பார்த்துவிட்டு அதைச் சொல்லலாமெண்டு நினைக்கிறன். உங்கடை கருத்துகளை எழுதுவீங்களா? அல்லது வழமைபோல மௌனம் சாதிப்பீங்களா? அல்லது அபிப்பிராயமே இல்லாமல் இருப்பது நல்லது ரீயைக் குடிப்போம் என்று இருக்கப் போகிறீர்களா? •



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டிலின் போக்கும், எமது நோக்கும்.

நண்பர்கள் சிலர் சேர்ந்து பத்திரிகை நடத்தி தாமே பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்கள், சமூக மாற்றத்தை நிகழ்த்தும் ஆக்கக்கூறுகள் என்று எண்ணாதவரையும் தூண்டில் விமர்சனத்திற்கு உட்படுத்தப்படவேண்டியதுதாம்.


மேற்கைரோப்பிய நாடுகளில் இருந்து வெளியாகும் பல சிற்றேடுகளும், அவற்றை வெளிக்கொணரும் வெளியீட்டாளர்களும் தம்மைத் தாமே புரட்சியின்வடிகால்களாக எண்ணிக் கொள்ளும் இவ்வேளையில் தூண்டிலை விவாதப்படுத்தியே தீரவேண்டும்.

தன்னார்வக் குணாம்சம் கொண்ட தூண்டில் பத்திரிகை ஆசிரியர் குழுவும், அதன் வாசகர் வட்டங்களும் தரும் வாதப் பிரதிவாதங்கள் யாவும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியதுதாம்.

பொய்மைகளையே தேசியவிடுதலையின் கிரீடமென்று தம் பட்டமடிக்கும் பிரவாகச் செய்திக் கதிர்கள். வெகுஜன சிந்தனைகளை வென்றுவிட்ட நிலையில் நாம் உண்மைகளைத் தேடி உருமாறிய நிலையில்கூட தூண்டில் பற்றிய விவாதத் தொடரை உன்னிப்பாகவே நோக்கினோம்.

எம்மால், எமது ஊசலாட்டத்தால் வர்க்க முனைப்புகொண்ட புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தோழர்கள் பலர் தோன்றிய இன்றைய சூழலில் நாம் தூண்டில் பற்றி நோக்குவது எம்மை நாம் எதுவரை கொண்டு சென்றுள்ளோம் என்பதை வரையறுக்கக்கூடியதாகவுமிருக்கும்.

தமிழீழப் பகுதிகளை பாதுகாத்து வேலிபோட வேண்டுமென்று துப்பாக்கியேந்தி மடிவதும், மக்களைக் குண்டு மழையில் குழிகளுக்குள் நுழைய விடுவதும் இனவிடுதலைக்குத் தாமெனபறையடிக்கும் இந்தச் சூழலில் நாம்



www.tamilarangam.net

கூறுவதெல்லாம் கூரிய முறையில் குறை, நிறைகளைக் களைந்துவிடுமென்ற நம்பிக்கையும் அருகிப் போன மனநிலையைத் தோற்று

விக்குமளவிற்கு நமது செயற்பாடுகள் அவதாரமெடுக்கும் இப்போதைய காலவர்த்தமானத்தில் நாம் தூண்டிலின் விவாதத் தொடரில் பங்குபெறுவது தவிர்க்க முடியாதது.

இதுவரைகால தூண்டில் ஏட்டின் கருத்துகளிலிருந்து தூண்டில் ஒரு தன்னார்வக் குழுவின் முகாமிலிருந்து மிகையான கற்பனைகளைத் தாங்கி இலங்கையில் சமூக மாற்றத்தை நிகழ்த்கூடிய சக்திகளையெல்லாம் ஒருங்கிணைக்குமென்ற மாயையை வாசகர் மனதில் ஏற்படுத்தியது ஒரு தருக்கநிலை விளக்கமாகும்.

தூண்டிலின் ஒவ்வொரு ஆக்கதாரர்களும், விவாதத்தொடரில் பங்குபற்றிய பலரும் திண்ணைக்கட்டிலிருந்து நிலைமைகளை தூண்டிலில் விவாதமாகத் தொடரும் நிலை இன்னும் தொடரும்.

இலங்கையில் நிகழும் நிகழ்வுகளின் விளைவுகள் எமது உறவுகளையெல்லாம் எம்மிடமிருந்து நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் பிரித்துவிட்ட நிலையில் நாம் தியானத்தின் பிடியில் சிக்கியதும், தியானம் எம்மைச் சீரமைக்க முனையாததால் அதையே வெறுத்து ஒதுக்கும் நிலையில் பலர் பாலர்பாட வாக்கியங்களையும், பரதவிப்புகளையும் படைக்க முனைவது சாத்தியமாக்கப்பட்டுவிட்டது இன்றைய அஞ்ஞாத வாழ்வில்.

நிகழ்வுகள் சார்ந்து சிந்திக்கும் அதேவேளை மிகையாக எதையும் கற்பனைவாத அறிதலுக்குள்ளிருந்து எடுத்து வைக்கப் படாது. ஆனால் தூண்டில் பற்றிய தூண்டிலின் போக்கானது ஒரு புத்திஜீவித முகாமுக்குள்ளிருந்து பிறப்பிக்கப்பட்டதென்றாலும் தற்போது வெறும் உணர்ச்சிகளது வெளிப்பாடாகவே விவாதிக்கப்படுகிறது. சாதாரண உண்மைகளைக்கூட ஏதேதோ வார்த்தைகளுக்குள் முடக்கி இங்கு பலர் சொற்சிலம்பம் ஆடவேண்டாமே.

ஈழவிடுதலையைத் தூண்டில் இதுவரையும் குத்தகைக்கு எடுக்கவில்லை. இனியும் அப்படியே நகரவேண்டுமென்ற பார்வையுடன் தூண்டிலால் ஆகப் போவது என்னவென்பது பற்றிப் பார்ப்போம்.

ஐரோப்பிய அகதிவாழ்வு சூழலில் ஈழத்தில் வாழ்விழந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும்

தமிழர்களுக்கு ஈழநிலைமைகளையும், உருத் தெரியாமல் மறைக்கப்படும் உண்மைகளையும் வெளிக்கொணரும் செயல்களில் இங்கிருந்து வரும் சிற்றேடுகளுக்குப் பெரும் பங்குண்டு. இதைத் தூண்டிலும் செவ்வனே செய்கிறது. எனினும் இச் சிற்றேடுகளினால் இலங்கையிலுள்ள அரசியல் போக்குகளை எவ்வகையில் மாற்றிய—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மைக்கக்கூடிய தகைமைகள் இருக்கின்றன? அல்லது இச் சிற்றேடுகள் அதைச் செய்யமுடியுமெனத் த்ததுவவாதம் புரிகின்றனவா ? இல்லை! தூண்டிலின் இயக்கப்பாட்டின் வாயிலாகத் தூண்டில் கொண்டிருக்கும் வர்க்க உணர்வுள்ள வாசகர்களையாவது தூண்டில் தன் ஆளுமைக்கான நிலைமைகளுக்குப் பயன்படுத்தியுள்ளதா? இல்லை! தூண்டிலின் இதுவரைகால கருத்தியல் விவாதப் போக்கிலிருந்து தூண்டில் தன்னையொரு சமூக மாற்றத்திற்கான முன் நிபந்தனையுடைய முன்னகர்வாகவே காட்டிவந்துள்ளது.

இந்த நோக்கோடுதாம் நாம் தூண்டிலில் உள்ளார்ந்த ஈடுபாட்டைக் கொண்டோம் . இதுவரைகால தூண்டிலின் செயற்பாட்டிலிருந்து தூண்டில் தன் வாசகர்களில் பாட்டாளிவர்க்க உணர்வுள்ள வாசகர்களை ஒரு செயற்திட்டம் நோக்கிய பாதைக்கு அழைத்துச்செல்ல முடியாது தடம்புரண்டு போய்விட்டது.

தூண்டிலுக்கான 4 அல்லது 5 வாசகர்களின் வாய்ப்பாட்டுமுறை கருத்துகளுடன் தூண்டில் ஐக்கியமாகி தனக்குள்ளேயே குறுகி, வீங்கிவிட்டது. இந்தப் போக்கிலிருந்து தூண்டில் முதலில் விடுபடுவதும், தன்னை விசாலமானதொரு பாதைக் கூடாக நகர்த்த முனைவதும், அது சார்ந்த வாசகர்களின் சந்திப்புகளை மேற்கொள்வதும், வர்க்க உணர்வுள்ள வாசகர்களை ஒரு வடிவத்திற்குள் கொண்டுவர முயற்சிக்கின்ற முன்னகர்வைத் தாங்கிக் கொள்ளவும் தூண்டில் இனிமேலும் தவறக்கூடாது.

கடந்தகாலத் தூண்டில் பற்றிய திண்ணைத் தியானங்கள் பல சூடான கருத்துகளை பகிர்ந்துள்ளன. எனவே தூண்டிலின் இன்றைய கால வர்த்தமானத்துக்கான வேலைத் திட்டம் மேற்காட்டியபடிதாம் இருக்குமே தவிர வெறும் கருத்துக் கதம்ப நாடகமாக இருக்கமுடியாது.

இதுகாலவரையும் செய்த தவறுகள் விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்து திருத்திக் கொள்ளவும், அது சார்ந்த மேற்கைரோப்பாவில் சாத்தியமான வேலைத் திட்டம் வகுக்கவும் தூண்டில் முனையவேண்டும். இது தவிர்ந்தால் தூண்டில் அச்சிடுவதை நிறுத்திவிட்டு கடலோடிகள் பிரமைகளை ஏற்படுத்தாமல் ஒதுங்கிக்கொள்வது நியாயமாகும்.

ப.வி. ஸ்ரீரங்கன்.

---

எல்லை மீறியவள் (தொடர்ச்சி)

"அப்ப பாலகுமார் உங்கடை பக்றிக்கும் வர வேண்டியிருக்கும்" என்றான் ஞானம்.

சுமார் ஒரு மாதத்தின் பின் பாலகுமார் சொன்னமாதிரி செய்தேவிட்டான்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலியல் வன்முறைக்குள் சிறுவர்கள்

எல். வந்சலா

சிறுவர்களின் நிலை என்ன என்றவுடன் எவை எமக்கு ஞாபகத்துக்கு வருகின்றன?

இலங்கையில், மண்ணையும் மக்களையும் காப்பாற்றுகிறோமென்ற தலைமைகளின் 'வேத வாக்குகளுக்குக்' கீழ்ப் படிந்து துப்பாக்கிகளுடனும், வெடி குண்டுகளுடனும் தமது நாட்களை நகர்த்தி உயிரிழந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சிறுவர்கள்....

அந்நியச் சூழலில் அகப்பட்டு, தமிழில் படிப்பதா, டொச்சில் படிப்பதா, ஜேர்மெனியில் தான் இருப்போமோ, இந்தியாவுக்குப் போவோமா, இலங்கைக்குப் போவோமா என்று பெற்றோரின் போக்குக்கு இழுபட்டுத் திசையறியாதிருக்கும் வெளிநாட்டு அகதிச் சிறுவர்கள்...

பட்டினியாலும், கொடிய சித்திரவதைகளினாலும் இறந்துகொண்டிருக்கும் எதியோப்பியா, பிறேசில்... நாட்டுச்சிறுவர்கள்....

நாங்கள் அறிந்து கொண்டிருப்பது இந்தச் சிறுவர்களைப் பற்றித்தான். இவர்களைப் போலவே வேறொரு பயங்கரவாதத்துக்கு முகங் கொடுத்துகொண்டிருக்கும் இன்னொரு பகுதி சிறுவர்களை அறிவோமா? அது தான் சிறுவர்கள் மேல் பிரயோகிக்கப்படும் பாலியல் வன்முறை.

அண்மையில் ஜேர்மெனியில் ஒரு நகரத்தில் பெற்றோருக்கு பரிசுப் பொருள் வாங்கக் கடைக்குச் சென்ற 8 வயதுச் சிறுமி முப்பது வயதுடைய ஒரு அந்நியனால் பலாத்காரப்படுத்தப்பட்டு காயங்களுடன் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டாள்.

இன்றைய காலகட்டத்தில் ஜேர்மெனியில் இது ஆச்சரியப்படக்கூடிய விடயமல்ல!!! ஆண்டு தோறும் ஜேர்மெனியில் மட்டும் 3,00,000இற்கும் மேற்பட்ட 1இலிருந்து 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறார்கள். இவர்களில் பெண்களின் தொகை 2,80,000. ஆண்களின் தொகை 20,000. அப்படியானால் ஆச்சரியமான விடயம் என்ன?

இக் குழந்தைகள் மேல் பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவர்களில் 50 %



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கு மேற்பட்டவர்கள் இக் குழந்தைகளின் தந்தை, மாமன், சித்தப்பா, பெரியப்பா, சகோதரன், தாயின் இரண்டாம் தாரக் கணவன், தாயின் தகப்பன், தந்தையின் தகப்பன் என்றால் நம்புவீர்களா? இது ஆச்சரியப்படவேண்டிய விடயமில்லை. அதிர்ச்சியடையவேண்டிய, மனம் பதைக்கும் உண்மை.

உடல் உறவு என்றால் என்ன? அது யாருக்கும் யாருக்குமிடையிலான உறவு? இதன் பின்விளைவுகள் என்ன? என்ற கேள்விகளுக்கு விடை தெரியாதவர்கள் குழந்தைகள்.

எல்லா மனிதர்களுடனும் மடியிலிருந்து, மார்பில் சாய்ந்து ஒட்டி, உறவாடக் கூடியவர்கள் குழந்தைகள்.

ஆண், பெண் என்கின்ற வித்தியாசத்தைப் பிரித்துப் பார்க்கும் அறிவற்றவர்கள் குழந்தைகள்.

உள்ளத்தில், உடலில் ஊடுருவுகின்ற எண்ணங்களை, உணர்வுகளை வார்த்தைகளாக வெளியிட தெரியாதவர்கள் குழந்தைகள்.

இந்தக் குழந்தைகளின் இயற்கைத் தன்மைகள் குடும்பவட்டத்துக்குள் உலவுகின்ற உறவினர்களுக்கு அதுவும் ஆண்களுக்கு சாதகமாக அமைந்துவிடுகிறது.

பாலியற் பலாத்காரம் அல்லது வன்முறை பற்றிக் கேள்விப்படும்போதோ, அனுபவிக்கும் போதோ உளவியலாக மட்டுமல்ல, உடல் ரீதியாகவும் நாம் வேதனையை அனுபவிக்கின்றோம்.

உலகிற்கு இப்போதுதான் அறிமுகமாகிக் கொண்டிருப்பவர்கள், கவலைகளின்றிச் சுதந்திரமாகத் திரிபவர்கள் திடீரெனக் காமாந்தரகர்களால் காயப்படுத்தப்பட்டு ஓர் மூலையில் தள்ளப்படுவது எவ்வளவு கொடூரம் நிறைந்தது.

குற்றவாளிகள் மிகவும் நெருங்கிய உறவினர்களாயிருப்பதாலும், பயம் காரணமாக வன்முறைகள் பற்றி வெளியே கூறப்படாததாலும், குழந்தைகள் பெரியவர்களான பின்பே தமக்கு நடந்தது என்ன என்பதை உணர்வதாலும் உண்மைகள் மூடிமறைக்கப்பட்டு விடுகின்றன.

உலகெங்கும் யுத்தம், மக்கள் படுகொலைகள், மதக் கலவரங்கள், ஆட்சிக் கலைப்புகள் என்று அரசியல் அராஜகங்களே தலை தூக்கி நிற்பதாலோ என்னவோ சிறுவர்கள் மீதான பாலியற் பலாத்காரம் அநேகரால் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

ஜேர்மெனியப் பெண்கள் சிலர் கூறும் சொந்த அனுபவங்களைக் கேட்டபின்பும் இந்தப்பயங்கரத்தின் தாத்பரியம் புரியாமற் போகுமா?

முதலாவது பெண்ணின் கதை:

"எனது பன்னிரண்டாவது வயதுப் பருவமானது பயங்கரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிறைந்ததும், மறக்க முடியாததுமாகும்.

அம்மா, அக்கா, தம்பியை வெளியே அனுப்பிவிட்டு அப்பா தனது 'வேலைகளை' என்னோடு ஆரம்பிப்பார். சிலவேளைகளில் அவரிடமிருந்து தப்பி வெளியே ஓடிவிடுவேன். மற்றவர்களை நிமிர்ந்து பார்க்க முடியாமல் வெட்கம் என்னுள் புகுந்து கொள்ளும்.

அப்பா என்னோடு நடந்துகொண்ட முறைகள் பற்றி எனது நண்பி ஒருத்திக்கு கூறினேன். எனக்கு உதவிபுரியும் நோக்குடன் அவள் தனது தாயாரிடம் கூறினாள். 'குடும்பநல ஸ்தாபனத்தில்' (Familien Für Sorge ) ஆலோசனைகள் கேட்கப்பட்டது. பொலிஸிற்கும் தெரிவிக்கப்பட்டது. ஒருநாள் பாடசாலையிலிருந்து இரு அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டேன். "நடந்தவைகளை அப்படியே கூறினால் அப்பாவுக்குத் தண்டனை வாங்கி கொடுக்கலாம்" என்றனர்.

அம்மாவால் எதையுமே நம்ப முடியவில்லை. சந்தேகத்துடன் கேள்விகள் கேட்டாள். விபரமாக எல்லாவற்றையும் கூறினேன்.

உடல் உறவுக்குப் பின் வயிற்றில் குழந்தை உருவாகலாமென்ற அறிவும், அக்கறையுமற்றிருந்த நேரத்தில் என் வயிறு குழந்தையைச் சுமந்து கொண்டிருந்தது.

அம்மா மூலம் தன்மீதுந்த குற்றச்சாட்டினை அறிந்துகொண்ட அப்பா எதிர் வழக்குப்போட்டார். அவர் செய்தது எப்படிப்பட்ட குற்றம் என்பது சரியாகத் தெரியாவிட்டாலும் அவர் தண்டிக்கப்படவேண்டியவர் என்பது மட்டும் எனக்குத் தெளிவாகவிருந்தது.

என்னை அன்பாக அணைத்துக்கொண்ட அப்பா "குற்றங்கள் எதுவும் நடக்கவில்லை"யென்றார். நீதிமன்றத்தில் நான் கூறவேண்டியவைகளைப் பற்றிப் பாடம் எடுத்தார். என் அறியாத்தனத்தாலும், இடையிடையே அவர் அன்பளிப்புச் செய்த 50, 100 டி.எம்.களாலும் சட்டத்தரணியின் செலவான 500 டி. எம். களுடன் 'கேஸ்' முடிவடைந்தது.

எனினும் ஏதோ அசிங்க-மான உணர்வு, குற்ற உணர்வு என்னைத் தொல்லைப்படுத்தியது.

இன்று திருமணமாகி ஏழு வயதுப் பிள்ளைக்குத் தயாகவிருக்கிறேன். அன்றைய நினைவுகள் இப்போதும் என்னைத் தொந்தரவு செய்கின்றன"

இரண்டாவது பெண்ணின் கதை:

"குழந்தைகள் இல்லத்தில் வளர்ந்த நான் ஏழு வயதிலே-யே என் தந்தைக்கு அறிமுகமானேன். நான் தனிமையில் இருக்கும் சந்தர்ப்பங்களில் பலவந்தமாக என்னைக் கட்டிலில் தள்ளி தன் ஆசைகளைத் தீர்த்துக்கொள்வார் அப்பா. அம்மாவுக்கு –

www.tamilarangam.net

இது தெரியவந்ததும் கூட எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

என்னைத் தனியே விட்டுச் செல்ல வேண்டாமென அம்மா வெளியே போகும் சமயங்களில் காலில் விழுந்து மன்றாடுவேன். ஆனால் அம்மா என்னை லட்சியம் செய்வதில்லை. அதனால் அப்பாவின் கொடுமை 17 வயது வரை தொடர்ந்தது"

மூன்றாவது பெண்ணின் கதை:

"அம்மாவின் இரண்டாந்-தாரக் கணவனான என்னுடைய புதிய அப்பா முழுமையான சர்வாதிகாரி. அம்மாவுக்கு அவர் கடவுள் போல. சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் என்னையடிப்பார்.

அவர் என் உடம்பைத் தொட்டுத் தழுவி விளையாடும்-போது எனக்குப் பன்னிரண்டு வயது. அம்மா வைத்தியசாலையில். சகோதரன் பாடசாலைக்குச் சென்றிருந்தான்.

ஒரு மத்தியான வேளை குளியல் அறையில் முதன் முதலில் அப்பாவினால் நான் பலாத்காரப்படுத்தப்பட்டேன். என்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்றுதான் முயற்சித்தேன். அப்பாவின் பலம் இறுக்கிப் பிடித்தது. இதற்குப் பின் வீட்டுக்கு உடனேயே வராமல் பாடசாலை முடிந்து வெளியே சுற்றிவிட்டு-நேரங்கழித்தே வீடு திரும்புவேன்.

என்றாலும் கிழமையில் ஒருதடவையேனும் என்னைப் பலவந்தப்படுத்தி உடலுறவு கொள்வது அப்பாவுக்கு வழக்கமாகிப் போனது.

எனக்குப் பதினைந்து வயதாகவிருந்தபோது எனது டயறியை வாசித்த அம்மாவுக்கு எல்லாம் தெரியவந்தது. நான் பொய் சொல்வதாக அப்பா மறுத்தார்.

அடுத்த தடவை பொலிஸுக்குத் தெரிவிக்கும்படி அம்மா சொன்னாள். சிறிது காலம் நிம்மதியாகவிருந்தேன். மீண்டும் ஒருநாள் நான் பலாத்காரப்படுத்தப்பட்டபோது பொலிஸுக்குச் சொன்னேன்."

இரத்த உறவுகளின் மிருக வெறிக்குப் பலியாக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்ட சிறுவர்களின் நலன்களைக் கவனிக்கும் வைத்தியர் சொல்கிறார்:

"அடிபட்ட, கீறுப்பட்டு, பலத்த காயப்படுத்தப்பட்டுப் பாலியல்வன்முறைக்குப் பலியாக்கப்பட்ட குழந்தைகளுக்கும், இளவயதினருக்கும் சிகிச்சையளித்திருக்கிறேன்.

குழந்தைகளை வயிற்றில் சுமந்துகொண்டிருக்கும் 'குழந்தைத் தாய்களின்' நிலைமை மோசமானது.

பாட்டனாரினால் பலாத்காரப்படுத்தப்பட்ட 10 வயது சிறுமி வயிற்றில் குழந்தையுடன் இங்கு வந்தாள். பிள்ளை பிறக்

www.tamilarangam.net

கும் முன்னரேயே அவள் இறந்து போனாள். உயிரைவிடும்வரையில் தனக்கு நிகழ்ந்தது என்ன என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. இறப்பதற்கு முன் அவள் சொன்னாள்: "தங்கச்சியை தாத்தாவுடன் விளையாட விடவேண்டாம்"


பாலியல் உறவுகள் 'சுதந்திரமாக'ப் பரிமாறப்படும் இந்த நாட்டில் இவ்வளவு சீரழிவுகள் என்றால் இலங்கையில் ? இந்தியாவில்...?

இக் கொடுமைகள் பற்றி நான் அறிந்தவரையில் தமிழில் செய்திகள் வெளிவந்ததில்லை. எனக்குள் எழுந்த சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள நண்பர் ஒருவருடன் கதைத்தேன். அவர் தனது கடந்தகாலத்தை நினைவுபடுத்தினார்:

"நான் சின்ன வயதாகவிருந்தபோது சகோதரன் ஒருவனால் இரகசியமாகவும், பலவந்தமாகவும் இரவு நேரங்களில் உடலுறவு கொள்ளப்பட்டேன். அநேகமாக நான் நித்திரையாகவிருக்கையில் எனக்கு இது தெரியாமலே நிகழ்ந்தது. எத்தனையோ நாட்கள் விழிப்பாயிருந்திருக்கிறேன். அம்மாவிடமோ அல்லது வேறு யாரிடமோ சொல்லும் துணிவு எனக்கிருக்கவில்லை. பெற்றோர், பிள்ளைகளுக்கிடையிலான நெருக்கம், உடலுறவு, பலாத்காரம் பற்றிய எமது சமூகத்தின் பார்வை என்னை மௌனிக்க வைத்திருக்கக் கூடும்"

குடும்பம் என்ற அமைப்பு முறை முதலாளித்துவத்திற்கு மட்டுமல்ல காமவெறியர்களுக்கும் கைகட்டிச் சேவகம் செய்கிறது. யாரோ தமது நலன்களைத், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அனுகூலமாயிருக்கும் இச்சமூக அமைப்பை உடைத்து, மாற்றம் ஏற்படுத்த முனையும் இலக்கு. மிருக உணர்வாகிவிட்ட மனித உணர்வுகளைப் பற்றியும் இவற்றினால் பாதிக்கப்படுபவர்

(தொடர்ச்சி 57-ஆம் பக்கம்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாட்டிறச்சியும் மர்மநோயும்

வாணி

பல வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் ஆடு, மரை போன்ற விலங்குகளுக்கு மர்மமான வியாதியொன்று தொற்றியது. பி.எஸ்.சி( Bovine Spongiform Enzephal Opathie ) என்று பெயரிடப்பட்ட இந் நோய் இப்போது வேறு பல விலங்குகளையும் பீடிக்கத் தொடங்கிவிட்டது.

இந்த மர்மநோய்1921 ஆம் ஆண்டிலிருந்தே ஆடு, மரை போன்ற விலங்குகளைப் பாதிப்பது அறியப்பட்டிருப்பினும், இன்று மாடு, பூனை போன்ற விலங்குகளும் பாதிக்கப்படுவதாகத் தெரியவந்திருப்பது இந்நோய் பற்றிய அக்கறையைக் காட்டியிருக்கிறது!

1985இல் அமெரிக்காவில் கம்பளித் தோலுக்காக வளர்க்கப்பட்ட விலங்குகள் பல ஆயிரக்கணக்காக இம் மர்ம நோயினால் இறந்தன.

இந் நோய் தொற்றும் தன்மையுள்ளது என்பது அறியப்பட்டாலும், எப்படித் தொற்றுகிறது என்பது இன்றுவரை தெளிவாகவில்லை. அத்துடன் இந்நோயைத் தெளிவாக இனம் கண்டு கொள்ளவும் முடியவில்லை. வைரஸ் உடனு அல்லது வேறு கிருமிகளுடனு இந் நோய்க்கான காரணியை ஒப்பிடலாம் என்பதும் குழப்பமானதாகவேயுள்ளது.

இந் நோய் பரம்பரையுடன் கடத்தப்படுகிறதா அல்லது உணவு மூலமாகத் தொற்றுகிறதா என்பது சரியாகத் தெளிவாக்கப்படாததால், இம் மர்ம நோய்வாய்ப்பட்ட விலங்கின் இறைச்சியை மனிதன் உட்கொண்டால் ஆபத்துண்டாகுமா என்பதும் கேள்வியாகவுள்ளது.

இம் மர்ம நோய்க்கான அறியப்படாத கிருமியைப் பரிசோதனைக்காக 360 °C யில் 24 மணி நேரம் கொதிக்கவைத்துப் பார்த்தார்கள். அக் கிருமி கொல்லப்படவேயில்லை.

பி.எஸ்.சி என்ற பெயருள்ள இந் நோய் இரத்தத்திலும், மண்ணீரலிலும், நிணநீர் உறுப்புகளிலும் தனது ஆரம்ப வளர்ச்சியை மெதுவாக ஆரம்பித்து பலமடைந்தபின் திடீரென மூளையைச் சென்றடைந்து நரம்புகளைச் சுருக்கியும், தடைபண்ணியும் விடுவதால், இந் நோயால் பீடிக்கப்பட்ட விலங்குகள் வலிவந்ததுபோல் துடிதுடித்து இறந்துவிடுகின்றன.

80ஆம் ஆண்டிலிருந்து இங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிலாந்தில் இந் நோயினுல் பீடிக்கப்பட்டு இறந்த மிருகங்களை அரைத்து, மாவாக்கி, விலங்குகளுக்கான "சத்துணவாக" விநியோகிக்கப்பட்டன. இந்த உணவை உண்டதால்தான் மாடு, கோழி போன்ற பல விலங்குகளுக்கும் இந்நோய் தொற்றியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

ஜேர்மெனி இங்கிலாந்திடமிருந்து 1988இல் 594தொன்னும், 1989இல் 519 தொன்னுமாக பி. எஸ். சி. நோயால் பாதிக்கப்பட்ட மிருகங்களின் -கொழுப்பை இறக்குமதி செய்து "விலங்கு உணவாக" கோழிக்கும், பன்றிக்கும் பரிமாறியது. அத்துடன் 1989ஆம் ஆண்டில்1685 தொன் மாட்டிறைச்சி மூளையுடனும், நிணநீர்க்குடலுடனும் இறக்குமதியாகி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இறைச்சியாக மட்டுமல்லாது, இனப்பெருக்கம் செய்வதற்காக 1719 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண் மாடுகளும் இறக்குமதியாகின.

ஐரோப்பியப் பொருளாதாரச் சந்தை/ஐரோப்பியப் பாராளுமன்றச் சட்ங்களின் படி எந்த ஒரு பொருளையும் ஐரோப்பாவில் விற்பனை செய்வதற்கு தடைவிதிக்க முடியாதென்பதால் ஜேர்மெனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் தொடர்ந்தும் மர்மநோயால் பீடிக்கப்பட்ட மாட்டிறைச்சிகளைத் தொன் கணக்கில் இறக்குமதி செய்து மக்களுக்கு விற்பனையாக்கி வருகின்றன.

இங்கிலாந்தில் அண்மைக் காலமாக மாட்டிறைச்சிக்கான எதிர்ப்புகள் வெளிப்பட்டபோதும், பெரிதாக எதுவும் நடைபெற்றுவிடவில்லை. இந் நோயினுல் பீடிக்கப்பட்டு இறக்கும் மாடுகளின் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. மாதம் ஒன்றுக்குச் சுமார் 1000மாடுகள் இந் நோயால் பாதிக்கப்படுகின்றன. இவற்றில் அதிகம் பால் மாடுகளே என்பது குறிப்பிடத் தக்கது.

இம் மர்ம நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதற்கோ அல்லது தொடர்ந்து தொற்றுமல் தடுப்பதற்கோ உரிய வழிகள் காணப்படுவதற்குப் பதிலாக சில கடைகளில் 'கம்பேக்கர்' (Hamburger )என்ற உணவு இறைச்சியில்லாமல் மரக்கறியுடன் விற்கப்படுதலே "தீர்வாக" முன்வைக்கப்பட்டுள்ளது.

கடைசியாக கிடைத்த தகவலின்படி சில மருத்துவர்களின் சிகிச்சை முறையினுல் மனிதர்களுக்கும் இம் மர்ம நோய் தொற்றியுள்ளது என்ற அதிர்ச்சியான தகவல் வெளிவந்துள்ளது.

மாட்டிறைச்சியில் மர்ம நோயென்றுல் கம்பேக்கரில் இறைச்சியை எடுத்துவிட்டு மரக்கறியை வைத்ததுபோல், மனிதர்களுக்கும் இந் நோய் தொற்றினுல் மூளையையும், நிணநீர் உறுப்புகளையும் எடுத்துவிட்டுப் பதிலாக இலை, குழைகளை வைத்துவிடலாம் என்றுதான் " தீர்வு" சொல்வார்களோ? ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 21 ம் நூற்றாண்டுக்கு போவதற்கு 10 ஆண்டுகள் முன்பாக நம்முடைய தேசம் பற்றி 4 கவிதைகள்

அனிச்சா

## 3.

காற்று
உனது மரணச் சேதியை
காதில் அறைந்தது.

வீதியோரம் உறைந்து கிடந்த
உனது குருதி
மனிதம் மரணித்ததை
மௌனமாய்ச் சொன்னது.

நாம் என்ன செய்வோம்?
வாயை இழந்தோம்.
கரங்களை இழந்தோம்.
வெறும் வயிற்றுடன் மட்டும்
வாழ்ந்து தொலைக்கிறோம்.

தோழி,
சின்னச் சிட்டுப் போல்
பறந்து திரிந்தாய்.
நாம் பாடித் திரிந்த வீதியிலேயே
தன்னந் தனியளாய்
அனாதையைப் போல
மரணித்தாயா?
உன்னிடம் என்ன குற்றம் கண்டனர்?

மனதில் இரும்பும்,
மூளையில் துவக்கும்
இருக்கும் இந்த 'அமைதி' நாட்டில்
வேறு என்னதான் நடக்கக் கூடும்.

www.tamilarangam.net

பெண்ணென்று நீ முடங்கி இருக்கவில்லை.
உண்டு, உறங்கி வாழ்வைக் கழிக்கவில்லை.
எமது கரங்களை இறுகப் பற்றி
ஒளியைக் காட்டவிழைந்து நின்றாய்.

துவக்கும், மிருகமும்
ஆளும் தேசத்தில்
எமக்கேன் புலன்கள்?
எல்லாம் அடங்கட்டும்

உன்னைச் சுட்டு
எலும்பை எடுத்துப்
பாதையில் வீசினர்.
பாதைகள் மூடப்படுமென...
சாம்பலை எடுத்துக் காற்றில் எறிந்தனர்.
காற்றும் மௌனமாய் இருக்கட்டுமென.

மௌனத்திற்கு அப்பாலும் வாழ்வு உண்டு.
மரணத்தை மீறியும்
போராட்டம் உண்டு....

(நான்காவது கவிதை அடுத்த கலத்தில்!)

---

பின்னட்டை அறிவித்தல்

'பெண்ணிலைவாதம்; சில கேள்விகள்' என்ற நூலில் மொலினா தேன்மொழி

பாலியல் வன்முறைக்குள்.... (தொடர்ச்சி)

கள் பற்றியும் கவனத்திலெடுக்க வேண்டிய தேவையை இப்படியான பிரச்சினைகள் இன்னும் வலியுறுத்துகின்றன.


தூண்டில்

மார்ச் 1991

கலம்: 39

ஆசிரியர் குழு ........... கடலோடிகள்

முகவரி ........... THOONDIL
Südasien Büro
Grosse Heimstr. 58
4600 Dortmund 1
F.R.Germany

தொலைபேசி ........... (0231)136633
(புதன் கிழமைகளில் 14-20மணிவரை)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எங்கள் தளம் !

இன்றைய பெண்கள் அமைப்பு என்று குறிப்பிடும் போது அதற்கொரு படிமுறை வளர்ச்சி இருக்கிறது. சிறு கிராமங்களை எடுத்துக்கொண்டால் ஆரம்பத்தில் அங்கு 'மாதர்-சங்கங்கள்' அமைக்கப்பட்டு தையல், சமையல் வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. சமூகத் தொண்டுகள், வீதிகளைச் சுத்தஞ் செய்தல், வறிய குடும்பங்களுக்கு சில சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றன நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. வாழ்நாள் முழுவதையும் வீட்டுக்குள்ளேயே கழித்துவந்த பெண்களுக்கு வெளியே முகத்தைக் காட்ட இதுபோன்றசீர் திருத்த நடவடிக்கைகள் சிறு சந்தர்ப்பமளித்தன.

இவற்றின் தொடர்ச்சியாக இன்றைய பெண்கள் அமைப்புகளில் பல பெண்களுக்கான ஜனநாயக உரிமைகளை- வேலைவாய்ப்பு, வாக்களிப்பு, கருத்தடை செய்து கொள்ளல், விவாகரத்து- கோரிக்கைகளாக வைத்து இயங்கிவருகின்றன.

எங்கள் வளர்ச்சிகளைக் கண்டுகொண்ட, தமிழீழத்தில் தோன்றிய 'விடுதலை' இயக்கங்களும் வழமை போல எங்களை இரண்டாவது தட்டிலேயே வைத்துத் தமக்கு விரும்பியபடி பாவித்துக்கொண்டன.

எண்பத்தி ஐந்துக்குப் பிற்பட்ட காலப் பகுதிகளில் எங்களில் ஏராளமானோர் மேற்குலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளோம். அன்னிய நாடுகளிலாவது அழுக்குப்படிந்த சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்காமல் எம்மில் பலர் இன்னும் மெருகூட்டி வருகின்றோம்.

சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக சந்தா !

| | | | |
|---|---|---|---|
| மேற்கு ஜேர்மெனி ——— | 6 | மாதங்கள்: | 20,-டி.எம் |
| | 1 | வருடம்: | 38,-டி.எம் |
| ஐரோப்பிய நாடுகள் ——— | 6 | மாதங்கள்: | 25,-டி.எம் |
| | 1 | வருடம்: | 48,-டி.எம் |
| அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகள் ——— | 1 | வருடம்: | 65,-டி.எம் |
| அவுஸ்திரேலியா ——— | 1 | வருடம்: | 75,-டி.எம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த நாட்டில் நாமிருந்தாலும் ஆண்களால், குடும்பத்தினரால், முதலாளிகளால், அரசினால், கலாச்சார, மத, கருத்தியல் ரீதியான அனைத்துச் சுரண்டல்கள், ஒடுக்கு முறைகளிலிருந்தும் விடுபடவேண்டும் என்ற எமது நோக்கம் மாறுபட முடியாது.

முற்போக்குத்தனமாக கதைப்பவர்களும், எழுதுபவர்களும், இவற்றை இந்த வடிவங்களில் வரவேற்பவர்களும் இவை செயற்பாடுகளில் சந்திக்கும்போது எமக்கும் அவற்றுக்கும் சம்பந்தமில்லை என்பதுபோல ஒதுங்கிக் கொள்கிறோம். இவை தொடர்ந்து நாங்கள் 'தங்கியிருக்கும்' நிலையை உறுதிப்படுத்துவதுடன், விடுதலை என்பது ஒருநாள் வானத்திலிருந்து விழும் என்ற கனவு நிலையையே காட்டுகிறது.

அடுத்து, அரசியல் என்பது ஆண்களோடு மட்டுமே சம்பந்தப்பட்டது, அது எங்களுக்குத் தேவையில்லாதது என்பது போல எமக்குள் ஒரு வரையறை போட்டுக் கொள்கிறோம். அல்லது பெண் விடுதலை என்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்கிறோம். இது மாற்றப்பட வேண்டுமல்லாவா?

குறிப்பிடவேண்டிய முக்கிய விடயம் என்னவெனில் நித்தமும் தமது உடலை வருத்தி உழைக்கும் பெண்கள் இரட்டிப்பான ஒடுக்குமுறைகளைச் சந்தித்தாலும் அவர்களின் விடுதலை பற்றி, அவர்களின் பிரச்சினைகள் பற்றி நாங்கள் உணர்வுபூர்வமாகக் கவனத்தில் எடுப்பதில்லை. இந்தப் போக்கானது நாம் சார்ந்துள்ள நடுத்தர வர்க்க குணாம்சத்தைக் காட்டுவதுடன் எமது போக்குக்கு ஒரு மாற்றத்தைக் கோருகிறது.

விடுதலை பற்றிய எமது பார்வை விசாலப்படுத்தப்படுவதுடன் நடைமுறை அரசியலோடு எமது விவாதங்கள், கோரிக்கைகளை முன்வைத்து எம்மை வளர்த்தெடுத்துக்கொள்ளாமல் எந்த வர்க்கத்தின் விடுதலையையும் நாம் வென்றெடுக்க முடியாது.

---

தபாற்கணக்கு இல. 3o8o7468
Postscheckamt Dortmund
BLZ 44o1oo46

உங்கள் நிதியை அனுப்பி வைத்ததும் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்பி வைப்பதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவித்தல்

பெண்களே !

நாம் அடிமைகளாக வாழ்ந்து சாகப் பிறந்தவர்கள் அல்ல. இது எமக்கென விதிக்கப்பட்ட நியதியுமல்ல . ஆண்கள் எடுத்துக்கொண்டிருக்கும் அனுகூலங்களும், சௌகரியங்களும் அவர்களே ஏற்படுத்திக் கொண்டதுதான். எமக்கும் உணர்வுகள் உண்டு. எமக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. எமக்காகவும் வாழும் விருப்பமும், எம் ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு. எமது உடற்கூறு ஒன்றை மட்டும் பிரதானப்படுத்தி எம்மை அடிமைப்படுத்தும் அத்தனை விலங்குகளையும் உடைத்தெறிவோம். பொன் விலங்குகளும், பட்டு வலைகளும் எமக்கு வேண்டாம் . எம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் இச் சமூக / அரசியல்/பொருளாதார அமைப்பின் முதலாளித்துவ ஆண் மேலாதிக்கத் தன்மைகளையும், கலாச்சாரப் – பொய்மைகளின் வேர்களையும் இனங் காண்போம். நாம் மனிதர்களாக வாழ்வோம். விட்டில் பூச்சிகளாக விழாமல் வெளிச்சமாக மாறுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்